JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume 15 | Issue 09 |
November 2024 |
Mohan C. Lazarus |
Annual Subscription ₹ 100 |
Single Copy ₹ 10



## தாமதமும் ஏன்?

வல்லவர் உனக்காக
வைராக்கியமாய் இருக்க,
வாஞ்சையோடு ஓட...



# வாலிபர் உலகம்

*இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!*

## சந்தா விவரம்

தனிப்பிரதி ₹ 10/-
ஆண்டு சந்தா ₹ 100/-
ஆயுள் சந்தா ₹ 1000/-

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், **9750955547** என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

## உள்ளே...



**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com



# இன்னும் தாமதமா?

## தலைவாசல்

*எனக்குப் பிரியமான வாலிபர்களே! இயேசுவின் நாமத்தில் நான் உங்களை வாழ்த்துகிறேன். எப்பொழுதும் உங்களை ஜெயம் பெற செய்கிற தேவனை மனதார துதிக்கிறேன்.*

இந்தக் கடைசி கால எழுப்புதலில் வாலிபர்களின் பங்கு அதிகம் என்பதால் பலரும் தீவிரத்தோடு உங்கள் மாநிலங்களிலும் மாவட்டங்களிலும் ஊழியம் செய்வதைக் கண்டு தேவாதி தேவனைத் துதிக்கிறேன்.

ஒரு பக்கம் எழுப்புதலுக்காக ஓடிக்கொண்டு இருக்கிறோம்; மறுபக்கம் செய்ய வேண்டிய பலப் பணிகள் தாமதமாகச் செய்யப்படுகிறது என்பது தேவனின் வேதனை. வேதத்தில் எருசலேமில் தேவாலயத்தைக் கட்ட தேவன் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினால் பாபிலோனிலிருந்து ஒரு கூட்டம் எழும்பி வந்தார்கள். எருசலேமில் முதலில் பலிபீடத்தைக் கட்டி தேவனுக்கு சர்வாங்க தகன பலிகளை செலுத்தத் தொடங்கினார்கள். பின்னர் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டார்கள். ஆனால் அவர்களுக்கு எதிர்ப்பு வர ஆரம்பித்ததால் வேலையைப் பாதியிலேயே விட்டு விட்டார்கள். ஒரு நாள் இரண்டு நாள் அல்ல; 15 ஆண்டுகள் அவர்கள் தேவாலய வேலையை விட்டு விட்டார்கள். பின்னர் அதை மறந்து அவரவர் தங்கள் சொந்த வேலையைச் செய்யவும் தங்களுக்கு வீடு கட்டவும் தொடங்கினார்கள்.

பின்னர் ஆகாய் தீர்க்கதரிசியின் மூலம் வார்த்தை வெளிப்பட்டு, தேவன் செருபாபேலின் ஆவியையும், பிரதான ஆசாரியனாகிய யோசுவாவின் ஆவியையும், ஜனங்களின் ஆவியையும் எழுப்பினார். அவர்கள் எழும்பி ஆலயத்தைக் கட்டி முடித்தார்கள்.

இன்றைக்கு தேவன் உங்களை நம்பி தந்த பொறுப்புகளை எவ்வளவு தூரம் சிறப்பாகச் செய்தீர்கள்? எத்தனை வேலையைப் பாதியில் நிறுத்தி விட்டீர்கள்? நம்முடைய சொந்த வேலைகளை ஒருபொழுதும் தாமதமின்றி, எல்லாவற்றையும் சரியான நேரத்தில் செய்கிறோம், ஆனால் தேவனுடைய வேலை என்று வரும்போது எவ்வளவு சாக்குப்போக்கு சொல்லுகிறோம். நம்முடைய தாமதத்தினால் தேவனுடைய ராஜ்ஜியத்தின் பணி தொய்ந்து போகிறது. பல நேரங்களில் நின்றே போகிறது. தேவன் உங்களைச் செருபாபேல் போல் தலைவனாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். தீவிரமாய் செய்வீர்கள் என்று நம்பி பொறுப்பு கொடுத்தால், தாமதமாய் செய்யும்போது அது தேவ திட்டத்தைப் பாதிக்கும் அல்லவா!

எனவே தாமதத்தை தவிர்த்து;
தீவிரத்தையும் துரிதத்தையும் நீங்கள் காண்பிக்கும்போது,



தேவனுடைய
உள்ளம் மகிழும்.



எனவே
சோர்ந்து போகாமல்
நீ முன்னேறிடு!

தடை ஏது வந்தாலும்,
தகர்த்து சென்றிடு!

**தேவன் உங்களோடு இருந்து உங்கள் கரங்களையும் இருதயத்தையும் ஸ்திரப்படுத்துவாராக!!**

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி தொகுப்பு: காட்லின்

# குடிசையிலிருந்து கோபுரம்...



தமிழகத்தின் தென் பகுதியான கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில், ஒட்டிய நாவோடுப் பிறந்து, 10 வயது வரை திக்கித் திக்கிப் பேசிய சகோ. லியோ எட்மன் அவர்கள், எப்படி இன்றைக்கு physician Assistantஆக இருந்து கேன்சரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவம் செய்யும் மருத்துவர் ஆனார் என்று அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோம் வாருங்கள்.









**உங்களது குடும்பம் மற்றும் சிறு பிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?**



நான் கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்தேன். எனது அப்பா கொத்தனார் வேலை செய்து வருகிறார். எனக்கு ஒரு அக்கா இருக்கிறார்கள். எனது தாயார் வீட்டிலிருந்து எங்களைக் கவனித்து வருகிறார்கள். நாங்கள் வசித்த வீடு ஒரு ஓட்டு வீடாக இருந்ததால், மழைக்காலங்களில் மழைத் தண்ணீர் வீட்டுக்குள் ஒழுகும். ஒழுகும் இடங்களில் பாத்திரங்களை வைத்திருப்போம். இதுதான் எங்கள் குடும்ப சூழ்நிலை. எங்களது குடும்பம் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. நான் பள்ளி படிக்கும் நாட்களில் காலை வெறும் தண்ணீர் தான் குடித்து விட்டுச் செல்வேன். மதிய உணவு வெறும் சாப்பாடு மட்டும்தான்; அதற்கு ஒரு ரூபாய் ஊறுகாய் வாங்கி செல்வேன். அதுதான் எனது பள்ளி பருவத்தில் மதிய உணவாக இருந்தது. இதைப் பார்த்து எனது நண்பர்கள் எல்லாம் என்னைக் கிண்டல் செய்வார்கள்.

அதுமட்டுமல்லாமல், பிறப்பிலேயே எனது நாக்கு உள்ளே ஒட்டி இருந்ததால் என்னால் சரியாகப் பேச முடியாது. திக்கி திக்கி தான் பேசுவேன். என்னை எல்லோரும் கிண்டல் செய்வார்கள். ‘‘இவன் வாழ்நாள் முழுவதும் இப்படித்தான் பேசுவான்’’ என்று சொல்வார்கள்.

இந்தச் சூழ்நிலையில் ஒருநாள் எனது அம்மா ஜெபக்குழுவில் ஜெபிக்க சென்றபோது, ஏசாயா 32:4ம் வசனத்தில் 'தெற்றுவாயருடைய நாவு தடையின்றித் தெளிவாய்ப் பேசும்' என்ற வசனத்தின் மூலம் கர்த்தர் பேசினார். அந்த வசனத்தை வைத்து எனது அம்மா ஒவ்வொரு நாளும் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக நான் 10ம் வகுப்பு படிக்கும்போது தெளிவாகப் பேச ஆரம்பித்தேன். இயேசப்பா எனக்குத் தயவு பாராட்டி இதிலிருந்து அற்புத சுகத்தை தந்தார். நான் ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு தேவ மனிதர் ''நீ ஒரு ஹோமியோபதி மருத்துவராக வருவாய்'' என்று சொன்னார். அந்த வார்த்தை எனக்குள் ஆழமாகப் பதிந்தது. பத்தாம் வகுப்பு மிகவும் பிரயாசப்பட்டு படித்து முடித்து, 12ஆம் வகுப்பு **Science Methodology** எடுத்துப் படித்தேன். ஆனால் +2 படிக்கும்போது சரியாகப் படிக்க முடியாததினால் **chemistry** பாடத்தில் தோல்வியுற்றேன்.

**Chemistry பாடத்தில் தோல்வி அடைந்த நீங்கள் தொடர்ந்து படித்தீர்களா? உங்கள் மனநிலை எப்படி இருந்தது ?**

ஒரு பாடம் தோல்வியுற்றவுடன் மிகுந்த ஏமாற்றமாக இருந்தது. இனிமேல் என்னால் ஹோமியோபதி மருத்துவர் ஆக முடியாது! அது எனது கனவாகவே போகும், இனி என்னால் படிக்க முடியாது, என்ற கவலையோடு வீட்டிற்கு வந்தபோது, எனது அப்பா எனக்கு 2 **options** கொடுத்தார். ஒன்று, 'என்னைப் போலவே கொத்தனார் வேலைக்கு வந்து விடு, அல்லது பக்கத்தில் இருக்கும் பெட்ரோல் பங்கில் வேலைக்குச் சேர்ந்து விடு' என்று சொன்னார்கள். இது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. என்னுடைய நண்பர்கள் ஆர்ட்ஸ் காலேஜ் படிக்கலாம் என்றும் ஒரு ஆலோசனை கொடுத்தார்கள். ஆர்ட்ஸ் காலேஜ் சென்று ஏதோ ஒரு டிகிரி முடிக்கலாம் என்று சொன்ன ஆலோசனையும் எனக்கு மிகவும் நன்றாகத்தான் தெரிந்தது.

**சரி பிரதர், 12ஆம் வகுப்புத் தோல்வி அடைந்தேன் என்று சொன்னீர்கள்... அடுத்து உங்களது நகர்வு எப்படி இருந்தது?**

> பிறப்பிலேயே எனது நாக்கு உள்ளே ஒட்டி இருந்ததால் என்னால் சரியாகப் பேச முடியாது

அந்தக் காலகட்டத்தில் **Youth Fellowship** மற்றும் ஜெபங்களில் கலந்துகொள்ள ஆரம்பித்தேன். அப்பொழுது



அங்குள்ள ஒரு சகோதரன் எனக்கென்று பிரத்யேகமாக ஒரு **Tutor** நியமித்துப் படித்துக் கொடுக்க ஒழுங்கு செய்தார். **Tutor** எனக்கு அந்தப் பாடத்தை மிகவும் எளிமையாகவும் கதை வடிவிலும் நான் புரிந்து கொள்ளும் வகையில் எனக்கு மிகவும் எளிதாகச் சொல்லிக் கொடுத்தார். அந்த நாட்களில் மெடிக்கல் சீட் கிடைக்க எவ்வளவு **percentage** மார்க் வேண்டுமோ, அதே **percentage** மார்க் இயேசப்பா எனக்குக் கொடுத்தார். இருப்பினும் எனக்குச் சீட் கிடைக்குமா என்ற ஒரு கேள்வி எனக்குள் இருந்தது. விசுவாசத்தோடு படிவம் வாங்கி நிரப்பிக் கொடுத்தேன். எனக்கு **seat** கிடைத்து, தொடர்ந்து படிக்க ஆரம்பித்தேன். ஹோமியோபதி மருத்துவம் முதலாம் ஆண்டு முடியும்போது, அந்த ஆண்டுக்கான **fees** கட்ட முடியாத சூழ்நிலை. தினமும் என்னுடைய பெயரைச் சொல்லி **fees** கட்ட சொல்லும்போது எனக்கு மிகவும் அவமானமாக இருக்கும். என்னுடன் படிக்கும் நண்பர்கள் என்னைக் கேவலமாகப் பார்க்க ஆரம்பித்தார்கள். எனக்கு **Education** லோன் கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு அதை **Personal** லோன் ஆக மாற்றிக் கொடுத்தார்கள். **Personal** லோன் என்றாலே வட்டி விகிதம் அதிகமாக இருக்கும். அந்தக் கடனை அடைப்பதற்கு வட்டிக்கு மேல் வட்டி வாங்கி என்னுடைய படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். இதனால் கல்லூரியில் தொடர்ந்து படிக்க



முடியாமல் என் படிப்பை நிறுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் மிகவும் மன அழுத்தத்திற்குள்ளானேன்.

**சரி மிகவும் கஷ்டமான அந்தச் சூழ்நிலையை எப்படி மேற்கொண்டீர்கள்?**

அப்பொழுது ஒரு ஹோட்டலில், Cashier வேலைக்கு ஆள் தேவை என்றறிந்து சந்தோஷமாக வேலைக்குச் சேர்ந்தேன். காரணம் அங்கு மூன்று வேளையும் நல்ல சாப்பாடு கிடைக்கும். அந்த நாட்களில் எனக்குச் சாப்பாடு ரொம்ப பெரிய விஷயமாக இருந்தது. எந்த அவமானங்களையும் பொருட்படுத்தாமல், அந்த ஹோட்டலில் வேலைக்குச் சேர்ந்தேன். அதுதான் என் வாழ்க்கையின் திருப்புமுனையாக இருந்தது. அந்த ஹோட்டலில் பத்து நாட்கள் தான் வேலை செய்தேன். நான் வேலை செய்து வந்த ஹோட்டலில், நான் படித்த கல்லூரியில் வேலை பார்த்த நிறைய பேர் சாப்பிட வருவார்கள். அப்பொழுது ஒருவர் என்னைப் பற்றி விசாரித்து என் ஏழ்மை நிலையை அறிந்து எனக்காகக் கல்லூரி managementல் பேசினார். உடனே கல்லூரியிலிருந்து என்னைக் கூப்பிட்டு தொடர்ந்து படிக்க ஆசைப்படுகிறாயா? என்று கேட்டார்கள். ‘நான் படிக்க மிகவும் ஆவலாக இருக்கிறேன்’ என்று சொன்னதும், எல்லா தேர்வுகளையும் எழுத வைத்தார்கள். அந்தத் தேர்வில் நான் First கிளாஸில் வெற்றி பெற்றேன். தொடர்ந்து மூன்று வருடங்கள் படிக்க fees கட்ட என்ன செய்வது என்று யோசித்தபோது, தேவன் அற்புதமாகப் bankல் பழைய மேனேஜரை மாற்றிப் புதிய மேனேஜரைக் கொண்டு வந்து எனக்கு Education லோன் கிடைக்க உதவி செய்தார்.



“நான் என்ன செய்தாலும் தோல்வியாகவே இருக்கிறது”

**Praise God! பல தடைகளைத் தாண்டிக் கல்லூரிப் படிப்பை முடித்த நீங்கள் தற்போது எங்குப் பணியாற்றுகின்றீர்கள்?**

என்னுடைய நண்பர் ஒரு பெரிய மருத்துவமனையில் கேன்சர் departmentல் வேலைப் பார்த்து வந்தார். ஒருநாள் நான் அவரைப் பார்க்கச் சென்றபோது, ‘கேன்சரால் பாதிக்கப்பட்டவர்களை பார்த்தவுடன் ஏதாவது செய்ய வேண்டும்’ என்ற பாரம் எனக்கு உண்டானது. எனவே நண்பனிடம் கேட்டேன். அங்கேயே vacancy இருப்பதாகச் சொன்னார். நானும் அதற்காக முயற்சி செய்தேன். ஆனால் அப்போது எனக்கு அந்த வேலை கிடைக்கவில்லை. ‘‘நான் என்ன செய்தாலும் தோல்வியாகவே இருக்கிறது’’ என்று மிகவும் சோர்ந்து போனேன். அந்தச் சூழ்நிலையில் ஒரு வாலிபர் கூடுகையில் கலந்துகொண்டபோது, என்னால் ஜெபமே பண்ண முடியவில்லை. என்னையும் அறியாமல் மிகவும் அழுதேன். அழுதுகொண்டே வீட்டிற்கு வந்தேன். மறுநாள், அதே மருத்துவமனையிலிருந்து நான் முயற்சி செய்த கேன்சர் Departmentல் vacancy இருக்கிறது வந்து join பண்ணிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அன்றிலிருந்து இன்று வரைக்கும் அந்தப் புகழ்பெற்ற மருத்துவமனையில் 10 வருடங்களாகக் கேன்சர் departmentல் physician Assistantஆகக் கேன்சரால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பணியாற்றி வருகிறேன்.

**அருமை... நீங்கள் விரும்பினபடி தேவன் மருத்துவம் படிக்க வைத்து, நல்ல வேலையிலும் அமர்த்தி இன்றைக்கு உயர்த்தி வைத்திருக்கிறார். உங்களை மேன்மைப்படுத்திய ஆண்டவருக்காக என்ன செய்கிறீர்கள்?**

நான் என் சொந்த ஊருக்கு வரும்போது எல்லாம் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தோடு இணைந்து கிராம ஊழியம் செய்வதோடு இயேசுவின் அன்பை பகிர்ந்து வருகிறேன். அதுமட்டுமல்லாமல், என்னுடைய வேலை நேரம் தவிர மற்ற நேரங்களில் சுவிசேஷம் அறிவித்து வருகிறேன். அதோடு கேன்சரால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்களிடம் மிகவும் அன்பாகப் பேசி இயேசுவின் அன்பை வெளிப்படுத்தும்போது, அவர்கள் மிகவும் சந்தோஷப் படுகிறார்கள். அதைப் பார்க்கும்போது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.

**நீங்கள் சிறு வயதிலேயே ஒருசில ஆசீர்வாதங்கள் இல்லையே என்று ஏங்கி இருப்பீர்கள்... அந்த ஆசீர்வாதங்களை தேவன் கொடுத்தாரா? தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள் சிலவற்றை உங்களால் சொல்ல முடியுமா?**

நான் சிறுவயதில் வசித்த வீடு மிகவும் சிறிய ஓட்டு வீடு. மழை நாட்களில் மிகவும் கஷ்டப்படுவோம். ஆனால் இயேசு இப்பொழுது எங்களுக்கு மச்சு பாவின வீட்டைக் கொடுத்திருக்கிறார். கொரோனா நாட்களில் அநேக இடங்களுக்கு நடந்து சென்று தான் மருத்துவம் பார்த்து வந்தேன். அப்பொழுது Second handல் ஏதாவது வண்டி வாங்கலாமா என்று நினைத்தபோது, இயேசு எனக்குப் புதிய கார் கொடுத்து ஆசீர்வதித்தார். வெளிநாட்டிற்கு செல்ல வேண்டுமென்ற ஆசை எனக்குச் சிறு வயதிலிருந்தே இருந்தது. ஆனால் 'நம்மால் போக முடியுமா' என்ற கேள்வி இருந்தது. ஆனால் தேவன் ஜப்பான் தேசத்தில் நடந்த Medical Conferenceல் கலந்து கொள்ள கிருபை செய்தார்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

நான் Fail ஆகிவிட்டேன், என் future முடிந்து விட்டது, இனி அவ்வளவுதான், ஜெயிக்க முடியாது, தற்கொலை செய்து விடலாம் என்று நினைத்தோமானால், என்றுமே ஜெயிக்க முடியாது. நாம் எதிர்கொள்ளும் failure மட்டுமே நம்முடைய futureஐ முடிவு செய்ய முடியாது. நமது கனவுப் பாதையில் நிறைய போராட்டங்கள் வரும். அதை நாம் தைரியமாக மேற்கொண்டு முன்னோக்கி செல்ல வேண்டுமானால், இயேசுவை முன்வைத்து, நம்முடைய எல்லா பயத்தையும் நீக்கிவிட்டு, நம்மை அர்ப்பணிக்கும்போது, இயேசு நம்மோடு இருந்து நம்மை எல்லாவற்றிலும் ஆசீர்வதிப்பார்.



**அன்பான வாலிபர்களே! ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து திக்கி திக்கிப் பேசிய சகோதரர் லியோ அவர்களுக்குத் தேவன் அற்புதம் செய்து இன்றைக்கு ஒரு பெரிய மருத்துவராக மாற்ற முடியுமானால், நீங்களும் கூட ஏதோ ஒரு குறையோடு, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் என்னால் படிக்க முடியவில்லையே என்று சோர்ந்து முடங்கிப் போய் இருக்கிறீர்களா?**

**Dr. லியோவோடு இருந்த தேவன் உங்களோடும் இருந்து உங்களுடைய கனவை நிறைவேற்றுவார்!**



# குழந்தைகள் தினம்



## குழந்தைக்கு சொல்லித்தர வேண்டிய பாதுகாப்பு விதிகள்

- முன்பின் தெரியாத, அறிமுகம் இல்லாத நபர்களிடம் சாக்லேட், பிஸ்கட், உணவு, பொம்மை என ஆசையைத் தூண்டும் பொருட்கள் கொடுத்தாலும் சரி, அதை வாங்கக் கூடாது என்று சொல்ல வேண்டும்.
- தீயின் பாதிப்பு பற்றி சொல்லிக்கொடுத்து, விளக்கு அருகில் செல்லக்கூடாது என்றும், தீயில் கை வைக்கக் கூடாது என்று சொல்லி புரிய வைக்க வேண்டும்.
- அண்டை வீட்டார், உறவினர்கள் குழந்தையின் உடலில் தொடக்கூடாத இடங்களைத் தொட்டு விளையாடுகிறார்கள் என்றால், அதைப் பெற்றோரிடம் சொல்ல வேண்டும் என்று கற்றுக்கொடுக்க வேண்டும்.
- மிகச்சிறிய குழந்தை என்றாலும், அப்பா, அம்மாவின் பெயர், வீடு இருக்கும் பகுதி, தொடர்புகொள்ள வேண்டிய நம்பர் உள்ளிட்டவற்றை தெரிந்து வைத்திருப்பது மிக மிக அவசியம்.
- நம் வீட்டின் முன்பகுதிதான் என்றாலும், பெற்றோர் கண்காணிப்பில் இருப்பதுதான் பாதுகாப்பு என்று சொல்லித்தர வேண்டும்.



Heart Beat

# எனக்காக வருவாயா?




நான் கல்லூரிப் படித்து முடித்து வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். நான் வெளிநாட்டிற்கு சென்று வேலை செய்து, என் குடும்பத்தைச் சப்போர்ட் பண்ண வேண்டும் என்பதே என்னுடைய Goal ஆக இருந்தது. ஆனால் நான் ஒரு வாலிபர் கூடுகைக்குச் சென்றபோது ஒரு அடையாளத்தைச் சொல்லி உன்னை ஊழியத்திற்கு தேவன் தெரிந்தெடுக்கிறார் என்று ஒரு ஊழியர் சொன்னார். தேவன் என்னை ஊழியத்திற்கு அழைக்கிறார் என்று தெரிகிறது, ஆனால் அந்த அழைப்பை நான் எப்படி confirm செய்வது? அழைப்பு இல்லாமல் ஊழியத்திற்கு சென்றால் அது கடினமான பாதையாக இருக்கும் என்பதை நான் என் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். தேவன் என்னை ஊழியத்திற்கு அழைக்கிறார் என்பதை எப்படி உறுதிப்படுத்துவது? - ஜான் கேரளா.

அன்பு சகோதரர் ஜான், உங்களின் கடிதத்தில் தேவனுடைய பதிலையும், அவருடைய வழி நடத்துதலையும் தேடும் இருதயத்தையும் காண முடிகிறது. ஜான், ஒருபக்கம் நீங்கள் வெளிநாட்டுக்கு சென்று வேலை பார்க்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. மறுபக்கம் தேவன் உங்களை அவருடைய ஊழியத்திற்கு அழைப்பதையும் உணர முடிகிறது. ஜான், முதலாவது தேவனுக்கு ஊழியம் செய்வது ஒரு மேன்மையான செயல். உலகத்தில் உள்ள எந்த ஒரு பொறுப்பான பதவியும், மதிப்பான வேலையும், தேவனுடைய ஊழியத்திற்கு இணையாகாது. மேலும் **'ஆரோனைப் போலத் தெரிந்து கொள்ளப்படாவிட்டால் இந்தக் கனமான ஊழியத்தை நிறைவேற்ற முடியாது'** என்று வேதம் கூறுகிறது.



தேவன் ஒரு நபரை அவருடைய மேன்மையான ஊழியத்திற்கு அழைக்கும்போது, அந்த நபரிடம் தெளிவாய் அழைப்பை உறுதி செய்வார். எனவே முதலாவது நீங்கள் மனதில் கொள்ள வேண்டிய காரியம் என்னவென்றால், தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிய வேண்டும்; "என்னை அழைக்கிறவர் என்னை நடத்துவார்" என்று விசுவாசிக்க வேண்டும். பலர் சொல்லுவார்கள், கர்த்தர் என்னிடம் பேசினால் உடனே நான் வேலையை விட்டு விட்டு அவருடைய பணியைச் செய்வேன் என்று. ஆனால் அவிசுவாசத்தின் நிமித்தம் அந்த அழைப்பைத் தள்ளிப் போடுவார்கள். தேவன் அவருடைய சித்தத்தை வேத வசனத்தின் மூலம் பேசுவார், ஊழியர்கள் மூலம் பேசலாம், சூழ்நிலைகள் மூலம் பேசலாம், அல்லது அவருடைய சத்தத்தை நேரடியாகவும் கேட்கலாம். இப்படி பல விதங்களில் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துவார். ஆண்டவர் பேசினால் உங்கள் உள்ளத்திற்குள் ஒரு பெரிய சமாதானம் உண்டாகும்.

பல நேரங்களில் ஒரு பெரிய போராட்டம் வருமானால் அது Faithக்கும் Fearக்கும் நடுவேதான். நான் ஊழியத்திற்கு போய்விட்டால் யார் என்னுடைய குடும்பத்தைக் கவனிப்பது, என் பெற்றோரைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை அல்லவா என்று பல இளைஞர்கள் சொல்லுவார்கள். ஆனால் ஆள்மனதில் அவிசுவாசம் ஆழமாகக் குடிகொண்டிருப்பதால் தான் அவர்களால் எந்தத் தீர்மானத்தையும் தெளிவாகச் செய்ய முடியவில்லை. 'நாம் தான் எல்லாவற்றையும் காப்பாற்றுகின்றோம்' என்ற எண்ணம் உண்டாகிறது. தேவனுடைய கிருபை இல்லாவிட்டால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

ஜான் தேவனிடம் ஒரு அடையாளத்தைக் கேட்பது தவறு அல்ல, ஆனால் அடையாளம் காட்டினால் தான் நம்புவேன் என்று சொல்வது தவறு. கிதியோன் தேவனிடம் ஒரு அடையாளத்தைக் கேட்டான், தேவனும் அவனுடைய அழைப்பை உறுதி செய்ய அவன் கேட்டுக்கொண்டபடி செய்தார். தேவனை அதிகமாய் நேசிப்பவர்களும், அவருடைய சித்தத்தை செய்யும் ஆர்வம் உள்ளவர்களும் தான் அவருடைய பரம அழைப்பிற்கு கீழ்ப்படிந்து தேவனுக்காக எழும்பிச் செயல்படுவார்கள். கடந்த சில ஆண்டுகளாகத்



தேவனுடைய பரம அழைப்பிற்கு கீழ்ப்படிந்து அர்ப்பணிக்கிற வாலிபர் கூட்டம் குறைந்துகொண்டே போகிறது. காரணம், வாலிபர்களின் எதிர்பார்ப்பு இயேசு எனக்கு என்ன தருவார் என்பதாகவே இருக்கிறது. ஆனால் "என்னை உண்டாக்கி, தன் ஜீவனை தந்து எனக்கு இரட்சிப்பை கொடுத்த இயேசுவுக்கு நான் என்ன செய்ய வேண்டும் அவருக்கு நான் என்ன தரலாம்" என்ற உணர்வு குறைந்து கொண்டே போகிறது.

ஜான், நீங்கள் உங்கள் ஜெப நேரங்களில் இயேசப்பா என்னை விட்டுக் கொடுக்கிறேன், நான் என்ன செய்ய நீர் விரும்புகிறீர் என்று கேட்டால் நிச்சயம் சொல்லுவார். அந்தப் பரம அழைப்புக்கு உங்களைப் போன்ற வாலிபர்கள் எழும்பினால் தான் தேசம் தேவனை சந்திக்கும். வில்லியம் கேரி, டேவிட் லிவிங்ஸ்டன், ஸ்வாட்ஸ், ரேனியஸ், கால்டுவெல் போன்ற மிஷனரிகள் தேவனுடைய அழைப்பைப் புரிந்ததால் தான், தங்கள் சொந்த தேசத்தையும், ஜனத்தையும், இனத்தையும் பெரிய பதவிகளையும், பொருட்களையும் தங்கள் மேன்மை களையும் விட்டு விட்டுத் தேவனுக்கு கீழ்ப்படிந்து இந்தியாவிற்கு வந்து இயேசுவின் அன்பை அறிவித்தார்கள்

**Now it's our turn John, to arise and share the Good News to the people of India.**

ஜெபித்து தைரியமாய் செயல்படுங்கள்!
தேவனுடைய கரம் உங்களோடு இருக்கும்!



# தானியேலின் ஜெயம்

செய்தி: மோகன் சி. லாசரஸ்

**அன்பு வாலிபச் செல்வங்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்! கடந்த மாத இதழில் தானியேலைக் குறித்து பல காரியங்களை நாம் தியானித்தோம். தானியேல் மூன்றுவேளை ஜெபித்ததால், தன்னைக் கறைபடாதபடி பார்த்துக்கொண்டதையும், அவருடைய விசுவாச ஜெபத்தை குறித்தும், தானியேலுக்கு ஜெபிக்கும் நண்பர்கள் இருந்ததால், சோதனை காலத்தில் எளிதாக ஜெயம் எடுத்ததையும் கடந்த இதழில் பார்த்தோம். தொடர்ந்து இவ்விதழில் தானியேலின் ஜெபத்தினால் ஏற்பட்ட விளைவுகளைப் பார்ப்போம்.**

தானியேலோவென்றால் அந்தப் பத்திரத்திற்கு கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே தினம் மூன்றுவேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான் (தானி 6:10).



'தானியேல் தினமும் மூன்றுவேளை முழங்காற்படியிட்டு ஜெபித்தார்' என்று வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது. தானியேல் முழங்காற்படியிட்டு, ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினார். அவரிடத்தில் ஜெபமும் ஸ்தோத்திரமும் இருந்தது. அவர் ஜெபித்து முடித்தபிறகு, ஆண்டவரே, 'என் ஜெபத்தைக் கேட்டதற்காக, உமக்கு ஸ்தோத்திரம். நான் ஜெபித்தபடி இந்தத் தேசத்தில் காரியம் நடக்கப் போகிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம்' என்று சொல்லிக் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரம் பண்ணி ஜெபத்தை முடித்தார்.

இப்படியாகத் தானியேலின் ஜெபம் ஒழுங்கும் கிரமமுமாக இருந்தது. அதேபோல நம்முடைய ஜெபத்திலும் ஸ்தோத்திரமும், விண்ணப்பமும் இணைந்திருக்க வேண்டும். உங்களுடைய விசுவாசத்தை ஸ்தோத்திரத்தில் வெளிப்படுத்த

வேண்டும். நாமும் தானியேலைப் போல முழங்காலில் நின்று ஜெபிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். நம்முடைய முழங்கால் காய்ப்புப் பிடிக்க வேண்டும். தானியேல் அவ்வாறு செய்தபடியினால், அவருடைய ஜெபம் வல்லமையுள்ளதாக இருந்தது.

தானியேலுக்கு விரோதமாக அந்தத் தேசத்தின் அதிகாரிகள் எழும்பி, ''அந்நிய தேசத்திலிருந்து வந்த இவன் நம்முடைய தேசத்தில் முதன்மையான இடத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறானே, இவனை அழித்துவிட வேண்டும்'' என்று நினைத்தார்கள். தானியேலின் மேல் என்ன குற்றத்தைக் கண்டுபிடிக்கலாம் என்று அவருடைய வாழ்க்கையை மிகக் கவனமாகப் பார்த்தார்கள். ஆனால் ஒரு குற்றத்தையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம், தானியேல் தனக்கு ராஜா கொடுத்த பொறுப்பில், வேலையில் உண்மையுள்ளவராக இருந்தார்.



இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலை நேரத்தில் உண்மையாக உழைக்காமல், அசதியாக இருந்துவிட்டு, என்னதான் ஆவியில் நிரம்பி, அந்நியபாஷையில் பேசினாலும், அவர்களுடைய ஜெபத்தை பிசாசு சட்டைபண்ணவே மாட்டான். உண்மையில்லாதவர்களுடைய ஜெபத்திலே எந்தவொரு வல்லமையும் இருக்காது. உங்களுடைய ஜெபத்தில் அழகான, அலங்காரமான வார்த்தைகள் இருக்கலாம், உங்கள் ஜெபத்தின் வார்த்தைகளில் ஓங்கிய சத்தம் இருக்கலாம், ஆனால், பிசாசு அதைக் கண்டெல்லாம் பயந்துவிடமாட்டான்! மாறாக, உண்மையாக, உத்தமமாக வாழ்பவர்களுடைய ஜெபத்திற்குத்தான் பிசாசு பயப்படுவான்.

தானியேலோடுகூட அநேக யூதர்கள் பாபிலோன் தேசத்திற்கு அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டார்கள். அவர்கள் எல்லோரும் கண்டிப்பாக ஜெபம் செய்திருப்பார்கள். யூதர்கள் அனைவருக்குமே ஜெபிக்கிற பழக்கம் இருந்திருக்கக்கூடும். அவர்கள் எல்லோருடைய ஜெபமும் பிசாசை நடுங்கப் பண்ணவில்லை. ஆனால் தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய சாட்சியுள்ள வாழ்க்கை சரித்திரத்தையே மாற்றி அமைத்தது.

### தானியேலுக்கு விரோதமாகப் பிசாசானவன், இந்தச் சட்டத்தைக் கொண்டுவரக் காரணம் என்ன?

தானியேலின் ஜெபத்தின் நிமித்தம், சாத்தானால் பாபிலோனில் செயல்பட முடியவில்லை. தானியேலுடைய ஜெபம், சாத்தானை நடுங்கப் பண்ணியது. பிசாசின் ஆளுகைக்கு அந்த ஜெபம் ஒரு முடிவைக் கொண்டு வந்தது. அதுவரைக்கும் பாபிலோனில் ஆளுகை செய்து கொண்டிருந்த சாத்தானால், இப்பொழுது அங்குக் கிரியை செய்ய முடியவில்லை. தானியேல் தினமும் இராஜாவுக்காக ஜெபித்ததால், இராஜாவின் மேல் சாத்தான் ஆளுகை செய்ய முடியவில்லை. தானியேலுடைய ஜெபத்தை தடுப்பதற்காகத்தான் பிசாசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தான். அதுவும் வெறும் 30 நாட்களுக்கு மட்டும்.

தானியேல் தன் ஜெபத்திற்கு விரோதமாகப் பிசாசு எழுந்திருக்கிறான் என்று தெரிந்தும், பயந்து ஓடாமல், தன் ஜெபத்தை நிறுத்தாமல், வழக்கமானபடி 3 முறை தைரியமாக ஜெபித்தார். அந்த ஜெபத்தினால் பிசாசு அந்த எல்லைக்குள் கிரியை செய்ய முடியாமல் போனது. கர்த்தருக்கு மட்டுமே பயந்து, அவர் சமூகத்தில் முழங்காலில் ஜெபிக்கிற ஜெப வீரர்கள், என்றைக்கும், எதற்கும், யாருக்கும் பயப்படமாட்டார்கள்.

அன்பான வாலிபர்களே! இந்த எழுப்புதலின் நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற நீங்கள் தான் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தானியேல்கள். உங்களுடைய ஜெபம் சாத்தானுடைய இராஜ்யத்தை பாதிக்க வேண்டும். அவனுடைய அஸ்திபாரத்தை அசைத்து, அவனுடைய கோட்டையில் விரிசலை உண்டாக்க வேண்டும். வான மண்டலங்களில் அலைந்து திரிகிற ஆவிகளுக்கு மத்தியில் குழப்பத்தையும், தாறுமாறுகளையும் உண்டாக்கி அவைகள் நடுநடுங்கி திக்குமுக்காடாக்கூடிய அளவிற்கு நீங்கள் ஜெபிக்க வேண்டும். தானியேலைப் போல நீங்கள் செய்யும் தைரியமான ஜெபம் தான், நம் தேசத்தில் எழுப்புதலை தீவிரமாகப் பரவச்செய்யும். உங்களுடைய ஜெபத்தைத் தாண்டி ஒன்றையுமே நடக்க விடக் கூடாது.
அப்படிப்பட்ட வைராக்கியத்தோடு ஜெபிக்க அர்ப்பணியுங்கள்.
கர்த்தர் உங்களைக்கொண்டு தேசங்களை அசைப்பார்!!



# தாமதம் ஏன்?



நம் வாழ்க்கையில் ஏற்படும் சில தாமதங்கள் சந்தோஷமாகவும், சில தாமதங்கள் நமது இருதயத்திற்கு கசப்பாகவும் வேதனையாகவும் இருக்கின்றது. தன்னுடைய அருமையான பழுப்பு நிற (Brown) கண்கள் நீலநிறக் கண்களாக மாற வேண்டும் என்று எமி கார்மைக்கேல் பல ஆண்டுகள் ஜெபித்தும் அதற்கான பதில் தேவனிடமிருந்து வராமல் தாமதமாகவே இருந்தது. பல வருடங்களுக்குப் பிறகு கார்மைக்கேல் மிஷனெரியாக இந்தியா வந்தபோது, இந்திய சிறுமிகள், பெண்கள் மற்றும் அனைவரின் கண்களும் பழுப்பு நிறமாக இருந்ததைக் கண்டார். இதைப்பார்த்த அவர்களுக்கு ஒரே சந்தோஷம். சிறுவயதில் தேவன் தன் ஜெபத்திற்கு பதில் அளிக்காததின் இரகசியம், இந்தியா வந்த பின்புதான் புரிந்தது.

தேவன் சில ஜெபங்களுக்கு பதில் தராமல் தாமதிக்கிறார் என்றால், அதில் அவருடைய அநாதி தீர்மானமும் ஆசீர்வாதமும் இருக்கும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. **“இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்” (யாக். 5:11).** ஆண்டவர் நம்முடைய ஜெபத்திற்கும் பிரயாசத்திற்கும் பதில் தராமல் தாமதிக்கும்போது பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

பொதுவாக மனிதர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வாக்குத்தத்தம் தாமதமாகும்போது, சோர்வுகளும், வெறுப்புகளும் உண்டாகி, தேவனை விட்டுப் பின்நோக்கி செல்லக்கூடிய சூழ்நிலை உண்டாகி விடுகிறது. ஆனால் கர்த்தருடைய திட்டங்களும் தரிசனமும் எப்போதும் தாமதிப்பதில்லை என்பது யாருக்கும் புரிவதில்லை. தேவ திட்டத்தைப் புரிந்து செயல்படுகிறவர்களை தேவன் ஒரு போதும் கைவிடமாட்டார். நாம் விரும்புவதை பெற்றுக் கொள்ள அல்லது ஒரு காரியத்தைச் செய்ய முயற்சிக்கும்போது தாமதங்கள் ஏற்படத்தான் செய்யும். அதை நினைத்துக் கவலைப்படாமல் தேவனை விசுவாசித்து நடக்கும் போது நாம் வெற்றியை நோக்கிச் செல்ல முடியும்.



யோசேப்பின் வாழ்க்கையில் தேவ திட்டம் நிறைவேறப் பல வருடங்கள் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. காத்திருந்த நாட்களில் அவனுடைய வாழ்வில் எவ்வளவு இழப்புகள், போராட்டங்கள், அவமானங்கள், எத்தனை ஏமாற்றங்கள், அநீதிகள் என்று சொல்லிக் கொள்ள முடியாத அளவிற்கு ஏராளமாய் இருந்தன. அவனுடைய கனவுக்கும் நிஜவாழ்க்கைக்கும் சம்பந்தம் இல்லாத சூழ்நிலைதான் இருந்தது. தாமதமான நாட்களில், தேவன் அவனோடுகூட இருந்து அவனுடைய தரிசனத்தை நிறைவேற்றப் போத்திபார் வீட்டிலும் சிறைச்சாலையிலும் யோசேப்பை உருவாக்கினார். கர்த்தருடைய நேரம் வந்தபோது அவனை எகிப்தின் அரண்மனைக்குக் கொண்டு போய் நிறுத்தி, தேவ திட்டத்தை நிறைவேற்றினார்.

உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் எதிர்பார்த்த வேலை, படிப்பு, திருமணம் போன்ற காரியங்கள் நிறைவேறாமல் தாமதமாக இருந்தால், அதைக் கண்டு சோர்ந்து போகாமலும், கலங்காமலும் இருங்கள். தாமதத்தை நினைத்து வருத்தப்படாமல் கர்த்தர் தந்த வாக்குறுதிகளை உறுதியாகப் பிடித்துக் கொண்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களை நீங்கள் பெற்றுக் கொள்வதற்கு அவர் உங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்று தேவனை விசுவாசித்து, யோசேப்பைப் போலக் கர்த்தருடைய வேளைக்காகக் காத்திருங்கள். நிச்சயம் ஒருநாள் அவர் சொன்னதை நிறைவேற்றுவார்.

சில வேளைகளில், நாம் ஊழிய அழைப்பை உறுதிப்படுத்திக்கொண்டு முன்னெடுக்க தாமதம் ஏற்படலாம். இப்படியான வேளைகளில் நாம் விசுவாசத்தில் சோர்ந்துபோய், நமது அழைப்பில் சந்தேகப்பட்டுப் பின்வாங்கி விடுகிறோம். ஆனால், தேவனை நம்பிய பிள்ளைகளின் வாழ்க்கையில் தாமதங்கள் மாத்திரமல்ல, எல்லாமே நன்மைக்கு ஏதுவாகவே நடக்கின்றன. ஆகையால் நாம் தடுமாற வேண்டிய அவசியமில்லை.

**பாருங்கள், நெகேமியாவும் தனது இருதயத்தில் தோன்றிய விருப்பத்தைக் குறித்து ராஜாவிடம் பகிர்ந்துகொள்ளச் சில மாதங்கள் ஆனது. ஆனாலும், அந்தத் தாமதம் தவறாகவில்லை. நெகேமியாவின் முகத்தில் தோன்றிய துக்கம், அவனுடைய மனதின் துக்கம் என்று கர்த்தர் ஏற்றவேளையில் ராஜாவுக்கு வெளிப்படுத்தினார். இதன் பயனாக நெகேமியா ராஜாவின் தயவைப் பெற்றுக்கொண்டான். காரியம் தாமதப்படக் கூடாது என்று, கர்த்தர் செயல்படுவதற்கு முன்பே நெகேமியா அவசரப்பட்டு ராஜாவிடம் சென்றிருந்தால் என்னவாகியிருக்குமோ!**

**தாமதம் நெகேமியாவின் வாழ்க்கையில் மட்டுமல்ல, தேவ அழைப்பைப் பெற்ற அநேகரின் வாழ்க்கையிலும் நாம் காண்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கர்த்தரை நம்பியிருக்கிற பிள்ளைகளுக்குக் கர்த்தர் எப்பொழுதும் பக்கபலமாக இருப்பார். அவர் தாமதித்தாலும் கைவிடமாட்டார். ஆகையால், நமது உள்ளத்தில் கர்த்தர் தந்த தரிசனம் நிறைவேறத் தாமதித்தாலும், விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் சோர்ந்துபோகாதிருப்போம். ஜெபத்தோடு தேவனையே தொடர்ந்து உறுதியாய் பற்றிக் கொள்ளுவோம்.**



**"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" (ஆபகூக் 2:3).** கர்த்தருடைய சித்தம் தாமதிப்பதில்லை, அது சரியான நேரத்தில் நிறைவேறும். வாழ்வின் கடினமான சூழ்நிலையில் சென்ற யோசேப்பு, தாவீது, நெகேமியா, ஆபிரகாம் போன்றவர்கள் தங்கள் நிலமையைக் கண்டு தேவனை வெறுக்காமலும், அவரை விட்டுப் பின் வாங்காமலும், 'தாமதம் ஏன்?' என்று தேவனிடத்தில் கேள்வி கேட்காமலும் இருந்தபடியால், கர்த்தர் அவர்களோடு கூட இருந்து ஆசீர்வதித்தார். **"வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (எபி. 10:36).**

**எனக்கன்பான வாலிபர்களே, உங்களுக்கு என்னுடைய மேலான ஆலோசனை என்னவென்றால், உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் தாமதங்களை நினைத்து வருந்தாமல், இயேசுவை விசுவாசித்து பொறுமையாய் காத்திருங்கள்.**

**"ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்"**
**(1 பேதுரு 5:6).**

**தேவன் நிச்சயம் உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவார்!**



சிறப்பு கட்டுரை: ஜாய்லின்

# இயேசு ஏன் தாமதிக்கிறார்?

*உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார். (அப் 1:11).*

**“மறுபடியும் வருவார்” என்று தூதர்கள் கூற, பரமேறிச்சென்ற தேவன் 2000 ஆண்டுகளுக்கு மேலாகியும் ஏன் இன்னும் திரும்ப வரவில்லை?**

தேவன் எல்லா மனிதர்களையும் இரட்சிக்கவே தமது வருகையைத் தாமதம் செய்கிறார். இயேசுவின் அன்பை புரிந்துக்கொள்ளாமல், மனிதர்களாகிய நாம் இன்னும் காலம் இருக்கிறது என்று பல கேடான பாவங்களைச் செய்து வருகிறோம். இவற்றை எல்லாம் அறிந்தும், தேவன் நம் மேல் வைத்த அன்பின் நிமித்தம் நம் அனைவரின் மனந்திரும்புதலுக்காகக் காத்திருக்கிறார். ஆத்துமா நரகத்தில் துன்பப்படுவது எவ்வளவு வேதனை என்பது இயேசுவுக்கு தெரியும். ஆதலால் தான் இயேசு தாமதித்துக் கொண்டிருக்கிறார். இதை அறியாத நாமோ கிருபையை உதாசீனப்படுத்தி வருகிறோம். ஆனாலும் தேவன் நம்மேல் தயை வைத்துத் தாமதித்து வருகிறார்.

அன்பான வாலிபர்களே! நம்மைச் சுற்றி இருக்கும் சூழ்நிலைகளைப் பார்த்து இயேசு ஏன் இன்னும் தாமதிக்கிறார் என்று நினைக்கிறீர்களா? எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டும், தேவ நாமம் மகிமைப்பட வேண்டும் என்று தான் இயேசு தாமதிக்கிறார். தேசம் இரட்சிப்படையும்போது இயேசு சீக்கிரத்தில் வருவார்! அவர் தாமதம் செய்யார்.

**தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:9).**



சாதனை: சுமா






# மன உறுதி

**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். வெற்றி என்பது எளிதான முறையில் கிடைக்கக்கூடிய கனி அல்ல. வெற்றிக் கனியைப் பெற அநேக விலைக்கிரயத்தை நம் மனதளவிலும், உடலளவிலும் செலுத்த வேண்டும். அப்படி போராடி செல்பவர்கள் மட்டுமே அதைப் பெற்றிட முடியும். அப்படி மனதளவில் போராடி வெற்றிக் கண்ட வெற்றியாளரின் வாழ்க்கை பயணம் உங்கள் முன்...**

உத்தரபிரதேச மாநிலத்தைப் பூர்வீகமாகக்கொண்ட ராதிகா குப்தா 1983ம் ஆண்டு பாகிஸ்தானில் பிறந்தார். பிரசவத்தின்போது செவிலியர் ஒருவரின் கவனக்குறைவால், இவருக்குக் கழுத்து முறிவு ஏற்பட்டு நாளடைவில் வளைந்த கழுத்துடையவரானார். இதுமாத்திரமல்லாமல் ராதிகாவிற்கு மாறுகண் குறைபாடும் இருந்தது. இந்தக் காரணத்தினால் சிறு வயதில் இருந்தே பல கேலி கிண்டல்களுக்கு ஆளானார். இவருடைய தந்தை இந்திய வெளியுறவு சேவையில் பணியாற்றி வந்ததால் நான்கு கண்டங்களில், பல தேசங்களில் வசிக்கவும், வெவ்வேறு பள்ளிகளில் படிக்கவும் நேர்ந்ததால் வித்தியாசமான சூழல்களுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்வது அவருக்குப் பெரிய சவாலாக இருந்தது. பள்ளி பருவத்தில் கடினமாகப் படித்து முன்னேறி, தொழில்நுட்பம் மற்றும் நிதி இரண்டிலும் அதிக நாட்டம் கொண்டிருந்ததால் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் **Computer Science Engineering** மற்றும் கணிதம் படித்தார். புகழ்பெற்ற **Wharton** பள்ளியில் பொருளாதாரத்தில் பட்டமும் பெற்று, வேலைக்குச் செல்லத் தன்னை தயார்படுத்திக் கொண்டார்.

ஆனால் இவரின் சரீர குறைபாட்டால் 7 முறை நேர்காணலில் நிராகரிக்கப்பட்டார். இதனால் மிகுந்த மனஅழுத்தத்திற்குள்ளாகி ‘தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இந்தச் சூழ்நிலையில் தன்னுடைய தோழி ஒருவரின் உதவியோடு மனநல சிகிச்சைகளைப்பெற்று, தற்கொலை எண்ணத்தை மேற்கொண்டு, ‘கேலி கிண்டல் செய்தவர்கள் முன் வாழ்ந்துக் காட்ட வேண்டும்’ என்று தைரியத்தை தன் துணையாகக் கொண்டு, விடாப்பிடியாக முயற்சித்து, இறுதியாக **Mckinsey** என்ற நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். பின்னர் 2009ம் ஆண்டு தன் கணவருடன் இணைந்து **Forefront Capital Management** என்ற சொத்து மேலாண்மை நிறுவனத்தைத் தொடங்கினார். 2014ம் ஆண்டு எடல்வீஸ் மியூச்சுவல் ஃபண்ட் **(Edelweiss Mutual Fund)** என்ற நிறுவனம் இவர்களது **Forefront Capital** நிறுவனத்தின் வளர்ச்சியைக்கண்டு அதனை வாங்கியது. மேலும் ராதிகா அந்நிறுவனத்தின் பெரும்புள்ளியானார். 2017ம் ஆண்டு, தன்னுடைய 33வது வயதில் ராதிகா **Edelweiss** மியூச்சுவல் ஃபண்டின் **CEO** ஆனார். 2023 ஆம் ஆண்டுக்குள் நிறுவனத்தின் மதிப்பை ₹6,700 கோடியிலிருந்து ₹1,04,896 கோடியாக உயர்த்தினார். மேலும் **JP Morgan Mutual Fund** என்ற மற்றொரு பெரிய நிறுவனத்தையும் வாங்க உதவினார். ராதிகாவின் புத்திசாலித்தனமான யோசனைகள் மற்றும் தலைமைத்துவத்தின் காரணமாக, **Edelweiss** மியூச்சுவல் ஃபண்ட் மிகவும் பிரபலமடைந்து வெற்றிகரமானது. ராதிகா தன்னுடைய வாழ்க்கையை கருவாக வைத்து ‘‘லிமிட்லெஸ்’’ **(Limitless)** என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

**இதை வாசித்துக் கொண்டிருக்கும் வருங்கால சாதனையாளர்களே! ராதிகா குப்தா வாழ்க்கையில் பல சவால்களைச் சந்தித்துதான் வெற்றி காண முடிந்தது. தன்னுடைய உடல் ஊனத்தை நினைத்து ஆரம்பத்தில் வருந்தினாலும், அவற்றைத் தக்க நேரத்தில் எதிர்கொண்டு வெற்றிக் கனியை அடைந்தார். அதேபோல என்ன குறைகள் உங்களிடம் இருந்தாலும் அதையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, உங்களிடம் என்ன திறமை உள்ளது என்று கண்டறிந்து, தடைகளைத் தாண்டி வெற்றிக் காணுங்கள்.**

தகவல்: காட்வின்

# கைபேசியை கையாளு! TECH - 10




Hello நண்பர்களே, இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! இந்த Tech article மூலமாக மீண்டும் உங்களைச் சந்திப்பது அதிக சந்தோஷம். கடந்த மாதம் Meta AI குறித்து அனைவரும் அறிந்து கொண்டோம். இந்த மாதம் மற்றுமொரு சுவாரஸ்யமான தகவலுடன் உங்களைச் சந்திக்க ஆயத்தமாக வந்திருக்கிறேன். வாங்க articleகுள் போகலாம்.

பொதுவாகக் கைபேசிகளை நாம் கையாளும்போது, சில செயலிகளுக்குக் குறிப்பிட்ட தொகை செலுத்தி தான் பயன்படுத்த வேண்டிய சூழல் இருக்கும். அப்படிப்பட்ட நேரங்களில் அதைத் தவிர்க்கச் சிலர் **mod apk** எனப்படும் **modified applications** உபயோகப்படுத்துவர். **Mod apk** என்றால் குறிப்பிட்ட சில **application**களை அதில் வழக்கமாக உள்ள வசதிகள் மட்டுமல்லாது அதிலும் கூடச் சில வசதிகளைச் சேர்த்து **modified application** ஆகத் தனியார் இணையதளத்தில் வெளியிடுவார்கள். இந்த வகையான **app**கள் **android play store**ல் இருந்தாலும் அதில் பணம் செலுத்தி உபயோகப்படுத்த வேண்டுமாதலால் அநேகர் இந்த **mod apk**-ஐ **download** செய்து அதைப் பயன்படுத்துவர். **Android play store** அல்லாது, **private website**ல் **download** செய்து உபயோகிக்கப்படுவதால் அநேக பாதுகாப்பு குறைபாடுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. ஒரு **app**ஐ நீங்கள் உங்கள் தொலைபேசியில் நிறுவும்போது அது உங்கள் கைபேசியில் உள்ள **files, photos, location** போன்ற சில காரியங்களைப் பயன்படுத்த அனுமதி கேட்கும்; அப்படி கேட்கும்போது நீங்கள் எல்லாவற்றிக்கும் **allow** என்று கொடுக்கும்போது, உங்களை அறியாமலேயே உங்கள் தொலைபேசியின் புகைப்படங்கள், தொலைபேசி எண்கள், இந்த உலகத்தில் நீங்கள் எங்குச் சென்றீர்கள் வந்தீர்கள் என்னும் தகவல் மற்றும் **google search history** ஆகிய தகவல்களை, நீங்கள் முகம் அறியாத மூன்றாம் நபருக்குக் கொடுத்துவிடீர்கள் என்று அர்த்தம். இதன் மூலம் பிற்காலங்களில் உங்கள் தனிப்பட்ட தகவல்களைத் திருடி, அல்லது உங்கள் கவனத்துக்கு வராமலே உங்கள் கேமரா மைக் போன்றவற்றை பயன்படுத்தி உங்கள் காரியங்களை ரகசியமாகப் பதிவு செய்து உங்களை மிரட்ட வாய்ப்புகள் உள்ளன.

**எனவே வாலிபர்களாகிய நீங்கள் உங்கள் பெற்றோருக்கும் உங்கள் உடன் பிறப்புகளுக்குக்கும் இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒருவேளை இப்படி நீங்கள் சில appsஐ பதிவிறக்கி இருந்தால் அதை இப்பொழுதே uninstall செய்துவிட உங்களை அன்புடன் நினைப்பூட்டுகிறேன். அதேபோல் clone app எனப்படும் மாற்று செயலிகளை நீங்கள் உபயோகப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். குறிப்பாக whatsapp செயலியின் clone app ஆக GB whatsapp எண்ணப்படும் செயலி ஒன்று உண்டு. அதில் whatsappஐ விட அதிக வசதிகள் உண்டு; ஆனால் உங்களின் பாதுகாப்பு முற்றிலும் இதன் மூலம் பாதிக்கப்படும் அபாயமும் உண்டு. GB whatsapp மூலம் உங்கள் தொலைபேசியில் உள்ள தொடர்பு எண்கள், கேமிரா, mic, files என எல்லாவற்றையும் ஹேக் செய்ய அதிகமதிகமாக வாய்ப்பு உள்ளது. எனவே வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைக் கையாள்வதில் கவனத்துடன் இருப்போம். தொழில்நுட்பத்தைக்கொண்டு கர்த்தரின் நாமத்தை உயர்த்த பிரயாசப்படுவோம்.**

வேதாகம கதாபாத்திரம்: சுமா



# சிப்பிக்குள் முத்து

# ஆகார்

**கதாபாத்திரத்தின் பெயர் —ஆகார்**

**பெயர் அர்த்தம் —அலைகிறவள்**

## ஆகாரின் வரலாறு

ஆகாரின் தாய், தந்தையார் அவர்களுடைய வறுமையினிமித்தம் எகிப்து மன்னருக்கு அவளை அடிமையாக விற்றனர். ஆபிரகாம் எகிப்திற்கு சென்றபோது சாராளை தன் சகோதரி என்று சொன்னதினிமித்தம் பார்வோனுடைய பிரபுக்கள் சாராளை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். ஆபிரகாமை சாராளின் அண்ணன் என்று நினைத்து அவனை வசப்படுத்தப் பார்வோன் ஆபிராமுக்கு அநேக ஆடுமாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைகளும், ஒட்டகங்களும் வெகுமதியாகக் கொடுத்தான். ஆனால் கர்த்தர் பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார். இதனால் பார்வோன் ஆபிரகாமையும், அவன் மனைவியையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அனுப்பிவிட்டான். அதில் வந்த வேலைக்காரிகளில் ஆகாரும் ஒருத்தி (ஆதி. 12:10-20).



## கர்த்தருடைய தூதனானவரின் சந்திப்பு

ஆகார் கர்ப்பவதியாய் இருக்கும்போது தன் எஜமானியை (சாராள்) விட்டு வனாந்தரத்திற்கு ஓடிப் போனாள். அங்கே கர்த்தருடைய தூதன் ஆகாரை சந்தித்து அவளை ஆசீர்வதித்து அவளுடைய சந்ததி எப்படி இருக்கும் என்று கூறினார். அந்த இடத்திலே ஆகார் கர்த்தருக்கு, **"நீர் என்னைக் காண்கின்ற தேவன்"** என்று பேரிட்டாள் (ஆதி. 16:13). வேதாகமத்தில் அநேக தேவ மனிதர்கள் கர்த்தர் தங்களுடன் பேசின இடத்திற்கு பெயரிட்டுள்ளனர். ஆனால் முதன்முதலில், **"என்னைக் காண்கின்ற தேவன்"** என்று தேவனுக்கே பேரிட்ட பெண் ஆகார் மட்டுமே. அடிமையான ஆகார் கர்த்தரைப் பற்றி ஆபிரகாமிடமிருந்து தான் அறிந்திருக்க வேண்டும். ஆகார் கர்த்தரிடம் வைத்த அன்பைக் கண்டு, இரண்டு முறை தேவன் அவளை நேரடியாகச் சந்தித்து அவளுக்கு வாக்கு கொடுத்துத் தேற்றினார். ஆகார் கர்த்தரை அவ்வளவாய் ருசித்திருந்தபடியால் தான் தன்னை சந்தித்த கர்த்தருக்கே பெயரிட்டு அவரை மகிமைப்படுத்தினாள்.

**அன்பு வாலிபர்களே! ஆகார் தேவனை அறியாத ஒரு புறஜாதியாக இருந்தபோதும், அவளுடைய நெருக்கத்தில் கர்த்தரைத் தனக்கு துணையாகக் கொண்டு, தேவனை தரிசித்தாள்; அதன் மூலம் அவருடைய அன்பை ருசித்தாள். நாமும் தேவனை அறிந்தால் மட்டும் போதாது; ஆகாரைப் போல அவரை ஒவ்வொரு நொடியும் ருசிக்க வேண்டும்.!**







# வாலிபர் எழுப்புதல் கூடுகை

எழுப்புதலில் வாலிபர்கள் பயன்படுத்தப்படவும், எழுப்புதல் அக்கினியை பரவச் செய்யவும், கடந்த ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பொள்ளாச்சி, சுரண்டை, வேளச்சேரி, திருப்பூர் மாவட்டம் - மடத்துகுளத்தூர், ஆலங்குளம், மயிலாடுதுறை, உளுந்தூர்பேட்டை, திருவண்ணாமலை, திசையன்விளை, திண்டிவனம், பழனி மற்றும் ஊத்துக்கோட்டை ஆகிய இடங்களில் வாலிபர் எழுப்புதல் கூடுகைகள் நடத்த தேவன் கிருபை செய்தார். இதில் பாஸ்டர் சரவணன், சகோ. அவினாஷ், சகோ. சதீஷ் குமார் மற்றும் சகோ. காலேப் ஆகியோர் தேவசெய்தியளித்து, வந்திருந்த வாலிபர்களை அபிஷேகத்தில் நடத்தினர். இதில் சுமார் **3450 வாலிபர்கள்** கலந்துகொண்டனர். அநேகர் புதிய அபிஷேகத்தைப் பெற்று புதுபெலனோடு தங்கள் தாலூக்காக்களில், கிராமங்களில் சுவிசேஷம் அறிவிப்போம் என்று அர்ப்பணித்து **1,33,280 கைப்பிரதிகளை** வாங்கி சென்றனர். தேவனுக்கே மகிமை!

































# ஹநசா நரகம்!

பகுதி - 8

செய்தி: டேனிட் எச்சரிப்பின்

ஹலோ friends! நம்மை நரகத்திற்கு கொண்டு போகப் பிசாசு கையில் எடுக்கும் கருவிகள் தான் பாவம். கடந்த மாதம் பயத்தை குறித்து தெளிவாக அறிந்து கொண்டோம். இந்த மாதம் எதைச் செய்யாமல் இருந்தால் பரலோகம் போக முடியாது என்று பார்க்கப் போகிறோம்.

## God's தேவ சித்தம் Will



**கிறிஸ்தவ வாழ்க்கை என்பது வெறும் பக்தியுள்ள வாழ்க்கை வாழ்வது மட்டுமல்ல. ஏதோ சண்டே churchக்கு போனோம், காணிக்கை போட்டோம், prayer பண்ணினோம், பைபிள் வாசித்தோம் என்று வெறும் பக்தியோடு மட்டும் இருப்பது அல்ல. தேவ சித்தத்தின்படி வாழ்வதே உண்மையான கிறிஸ்தவ ஜீவியம்.**

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமான ஆசை, விருப்பம் அல்லது சித்தம் இருக்கும். ''நான் அப்படி ஆகணும், இப்படியாகணும், இந்த மாதிரி பொண்ணு வேணும், இந்த மாதிரிப் பையன் வேணும், இந்தக் கம்பெனியில் work பண்ணனும், இவ்வளவு salary வேணும், இந்த countryக்கு போகணும்'' என்று சொல்லிக் கொண்டே போகலாம். நம்மைச் சுற்றி இருக்கும் பொருட்களைப் பாருங்கள். Fan காத்து தர, light வெளிச்சம் கொடுக்க உருவாக்கப் பட்டிருக்கிறது. இப்படி உருவாக்கப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு நோக்கம் உண்டு. மனிதனால் உண்டாக்கப்பட்ட ஒரு பொருளுக்கே ஒரு சிறந்த நோக்கம் இருக்குமானால், தேவனுடைய சாயலின்படி உருவாக்கப்பட்ட நமக்கு எவ்வளவு பெரிய நோக்கம் இருக்கும்??



தேவன் தன்னால் படைக்கப்பட்ட ஒவ்வொருவர் மேலும் ஒரு சித்தம் வைத்திருக்கிறார். அந்தச் சித்தத்தை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். இயேசு பிதாவின் சித்தத்தின்படி செய்யவே பூமிக்கு இறங்கி வந்தார் **(யோவான் 6:38).** பிதாவின் சித்தத்தின்படி செய்து முடிப்பதே இயேசுவின் போஜனமாய் இருந்தது **(யோவான் 4:34).** சிலுவை பாடுகளுக்கு முன்பதாகக் கெத்சமனே தோட்டத்தில் **"இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படி அல்ல உம் சித்தத்தின்படியே ஆகக் கடவது"** என்று பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபம் பண்ணினார் **(மத். 26:39).** இயேசு பிதாவின் சித்தத்தின்படியே தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார் **(கலா. 1:4).**

- **தேவ சித்தம் செய்ய வேண்டும் (எபே. 6:6).**
- **தேவ சித்தம் இன்னதென்று உணர வேண்டும் (எபே. 5:17).**
- **தேவ சித்தத்தை அறிகிற அறிவு நமக்கு வேண்டும் (கொலோ. 1:9) என்று வேதம் சொல்லுகிறது.**

அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் சந்தித்தபிறகு, பவுல் தேவனிடம் செய்த முதல் ஜெபம், 'ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாய் இருக்கிறீர்' என்பதே. தேவன் தாவீதை குறித்து, **"தாவீதை என் இருதயத்துக்கு**

ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானதை எல்லாம் அவன் செய்வான்" என்று சாட்சி கொடுத்தார் (அப். 13:22).

## சித்தத்தில் மூன்று வகைகள் உண்டு.

### பொதுவான தேவ சித்தம்

- எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செய்வது (I தெச. 5:18).
- நாம் பரிசுத்தகமுள்ளவர்களாக வேண்டும். (I தெச. 4:3).
- எல்லாரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டும் (I தீமோ. 2:4).
- நாம் நன்மை செய்து புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது (I பேதுரு 2:15).

இவையெல்லாம் பொதுவான தேவ சித்தம்.

### அனுமதிக்கப்பட்ட தேவ சித்தம்

சில காரியத்தில் தேவன் No சொல்லும்போது, 'இல்ல எனக்கு அதுதான் வேண்டும் என்று விடாப்பிடியாகத் தொடர்ந்து ஜெபிக்கும்போது தேவன் விருப்பம் இல்லாமல் அதை அனுமதிப்பார். உதாரணமாக, 'விசுவாசிக்கும் அவிசுவாசிக்கும் சம்பந்தம் ஏது' என்று வேதம் சொல்லுகிறது. சிலர் காதலித்து இந்த ஆண்ணை அல்லது இந்தப் பெண்ணைத் தான் திருமணம் செய்வேன் என்று சொல்லும்போது, தேவன் அதை நீங்கள் மிகவும் வருந்திக் கேட்கிறீர்கள் என்பதற்காக விருப்பம் இல்லாமல் அனுமதிப்பார். அது அனுமதிக்கப்பட்ட தேவ சித்தம். ஆனால் அதின் மூலம் வரும் விளைவுகளுக்குத் தேவன் பொறுப்பல்ல.

### பரிபூரண தேவ சித்தம்

ஆபிரகாம் எலியேசரை ஈசாக்குக்காகப் பெண் பார்க்கும்படி அனுப்பியபோது, கர்த்தர் எலியேசர் கேட்ட அடையாளங்களின்படியெல்லாம் ரெபெக்காளை ஆயத்தம் செய்து வைத்திருந்தது கர்த்தருடைய பரிபூரண சித்தம்.



### தேவ சித்தத்தின்படி செய்யும்போது வரும் பலன்கள்

- சித்தமானதை செய்தால் செவி கொடுப்பார் (யோவான் 9:31).
- சித்தத்தின்படி செய்கிறவன் என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (I யோவான் 2:17).

### சரி... தேவ சித்தத்தை எப்படி அறிவது?

தேவ சித்தத்தை அறிய நம் மனம் புதிதாகி மறுரூபமாக வேண்டும். நம் சிந்தை இயேசுவின் சிந்தை போலாக வேண்டும் (ரோமர் 12:2). நாம் கர்த்தரோடுள்ள உறவில் ஆழமாக வளர வளரப் பரிசுத்த ஆவியானவர் நம்மை நேர்த்தியாக நடத்தி தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துவார்.

### தேவ சித்தத்தை நிறைவேற்றாமல் போவதினால் வரும் பாதிப்புகள்

- சவுல் ராஜாமூலம் அமலேக்கியரை அழிக்க வேண்டும் என்பது தேவ சித்தம். ஆனால் சவுல் அமலேக்கியரை முற்றிலுமாய் அழிக்காமல் போனதனால் ராஜஸ்தானத்தை விட்டுத் தள்ளப்பட்டார்.
- பிலேயாம் தேவ சித்தத்திற்கு எதிராகச் செயல்பட்ட தினால் பட்டயத்தால் மடிந்தான்.
- யோனா கர்த்தருடைய சித்தத்திற்கு மாறாகச் செயல்பட முற்பட்டபோது மீன் அவரை விழுங்கிற்று.

**அருமை நண்பர்களே! தேவன் நம் வாழ்வில் என்ன செய்யச் சித்தம் வைத்திருக்கிறாரோ அதைச் செய்ய நாம் நம்மை முழுமையாக ஒப்புக்கொடுக்கும்போது அது நிறைவேறும். தேவ சித்தத்தை அறிந்து அதன்படி செய்யாத ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான் என்று வேதம் சொல்லுகிறது (லூக்கா 12:47). நாம் இயேசுவின் நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கலாம், பிசாசுகளைத் துரத்தி இருக்கலாம், அநேக அற்புதங்களைச் செய்திருக்கலாம்; ஆனால் அவர் சித்தத்தின்படி செய்கிறவன் தான் பரலோகம் செல்ல முடியும் (மத். 7:21-23), இல்லாவிட்டால் நரகத்திற்கு தான் போக வேண்டும்.**

**பிசாசானவன் நம்மைத் தேவ சித்தம் செய்ய விடாமல் தடுத்து, நைசாக நம்மை நரகத்திற்கு கொண்டு போகத் தீவிரமாகச் செயல்படுகிறான். அதனால் விழித்திருந்து நம் மேல் வைக்கப்பட்டிருக்கிற தேவ சித்தத்தை நிறைவேற்றிப் பரலோக பாக்கியத்தை பெற்றுக் கொள்வோம்.**

Okay Friends, அடுத்த மாதம் நரகத்திற்கு ஏதுவான மற்றொரு பாவத்தைக் குறித்து தெரிந்து கொள்ளலாம்.



தகவல்: காலேப்

# இரயில் பயணம்

பாகம்–7



**திங்கட்கிழமை மாலை தாம்ரம்-பீச் செல்லும் இரயிலில் ஆவலோடும், சற்று பதட்டத்தோடும் ஆண்ட்ரு விக்கியைச் சந்திக்க காத்திருக்க... விக்கி, இரயிலில் ஆண்ட்ரு இருக்கும் பெட்டியைத் தேடி ஏறினான்.**

**விக்கி:** (முகத்தில் மலர்ச்சியோடும், நிம்மதியோடும்) ஆண்ட்ரு, நீ சொன்ன மாதிரியே என் வேலைக்கு ஒன்னும் ஆகலடா... கடைசி நேரத்துல நான் இதற்கு முன் செய்த வேலைகளைப் பார்த்து, என்னைத் தொடர்ந்து வேலை செய்யச் சொல்லிட்டாங்க...

**ஆண்ட்ரு:** Thank you Jesus என்று சந்தோஷத்தில் சொன்னான்.

**விக்கி:** எனக்காக prayer பண்ணதுக்கு thanks ஆண்ட்ரு.

**ஆண்ட்ரு:** எனக்கு thanks சொல்லறத விட... இயேசுவுக்கு தான் நீ நன்றி சொல்லணும்.

**விக்கி:** (மௌனமாகத் தலை அசைத்து)... சரிடா.

**ஆண்ட்ரு:** உலகத்துல நடக்கிற காரியம் நம்ம வாழ்கைல நடந்தா தான் அதோட முக்கியத்துவம் தெரியுது விக்கி.

**விக்கி:** ஆமா ஆண்ட்ரு, எத்தனையோ பேர் வேலையிழந்தாங்கனு செய்தில கேட்கும் போதெல்லாம் புரியல, அத விட என் கம்பெனியிலேயே நிறைய பேர் வேலையிழந்தாங்க... அப்போ கூட எனக்கு அந்த வலி தெரியல... ஆனா இந்த 2 நாள்ல அதை உணர்ந்துட்டேன்.

**ஆண்ட்ரு:** உனக்கு இன்னொரு அதிர்ச்சியான செய்தி சொல்லட்டா...?










**விக்கி:** என்னடா? ஒரே அதிர்ச்சியா சொல்ற...

**ஆண்ட்ரு:** ஆப்ரிக்கா கண்டத்திலிருக்கிற நமிபியா நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்பட்டு, அந்த நாட்டு அரசாங்கம் தங்கள் தேசத்தில் இருக்கும் 700 காட்டு விலங்குகளைக் கொன்று தன் மக்களுக்கு உணவளிக்க போகிறதாம், அதில் 150 மிருகங்கள் கொல்லப்பட்டும் இருக்கிறது.

**விக்கி:** எப்போ டா இதெல்லாம் நடந்துச்சு?

**ஆண்ட்ரு:** சமீப நாட்களாக உலக அளவில் இதைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள்...

**விக்கி:** இப்படி காட்டு மிருகங்களைக் கொன்று சாப்பிடுற அளவுக்குப் போகும் வரை அரசாங்கம் என்ன பண்ணி கொண்டிருந்தது... (ஆதங்கத்தோடு கேட்டான்)

**ஆண்ட்ரு:** அரசாங்கத்தை மட்டுமே முழுவதும் குறை கூறவும் முடியாது...

**விக்கி:** அப்போ காரணம் தான் என்ன?

**ஆண்ட்ரு:** நமிபியா நாட்டில், கடந்த சில ஆண்டுகளாக மழை இல்லாததினால் பெரும் விவசாயங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, உணவு உற்பத்தி தடைப்பட்டிருக்கிறது. காலநிலை மாற்றம், எல் நினோ போன்றவை இதற்குக் காரணமாக இருக்கிறது...

**விக்கி:** எத்தனை பேர் இதனால பாதிக்கப்பட்டிருக்காங்க?

**ஆண்ட்ரு:** அந்நாட்டின் மக்கள் தொகையில் பாதி பேர் அதாவது சுமார் 14 லட்சம் பேர்னு சொல்றாங்க. இது கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத வறட்சின்னும் சொல்லப்படுது.

**விக்கி:** நம்ம நிலமை எவ்வளவோ பரவாயில்ல... இதற்குத் தீர்வு தான் என்ன ?

**ஆண்ட்ரு:** அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் உதவ முன் வந்திருக்கு. ஆனா இது எப்படி மாற்றத்தைத் தரும்ன்னு காலம் தான் பதில் சொல்லணும்.

**விக்கி:** ஏதோ நல்லது நடந்தா சரி.

**ஆண்ட்ரு:** இப்படிப்பட்ட பஞ்சங்கள் கடைசி காலத்தில் வரும்னு வேதாகமத்தில் சொல்லியிருக்கு. இதிலிருந்து தப்பிக்க ஒரே வழி இயேசு கிறிஸ்து மட்டும்தான். சரிடா இதெல்லாம் விடு... இயேசு உனக்கு நன்மை செய்திருக்கிறார், அடுத்த வாரமும் நீ **church**க்கு வந்திருடா.

**விக்கி:** எனக்கு வர விருப்பம் தான்... ஆனால் அங்கு நடப்பது ஒண்ணுமே எனக்குப் புரியலடா. சரி... நீ சொல்றேன்னு வரேன். ஆனா வெளிய தான் இருப்பேன்.

**ஆண்ட்ரு:** உன் இஷ்டம்... ஆனால் கண்டிப்பா வந்துரு.

(இவ்வளவு பெரிய மாற்றம் வந்ததே பெரிய விஷயம் என்று நினைத்துக் கொண்டான் ஆண்ட்ரு)

*இவர்களின் உரையாடல்கள் தொடரும்...*

கேரளா மாநிலம் - இடுக்கி மாவட்டத்தில்...

**வாலிபர் எழுப்புதல் கூடுகை**

நாள்: **நவம்பர் 16,** (சனிக்கிழமை)
நேரம் : காலை 10 மணி முதல்
மதியம் 2 மணி வரை

இடம்: *Library Hall,*
பள்ளிக்குன்னு

**தேவ செய்தி: சகோ. சதீஷ்குமார்**

தொடர்புக்கு : 89210 30029 / 99471 06507



சுவிசேஷ பயணம் ஜெனிபர்


# வீரமுள்ள தீமோத்தேயு

பகுதி-10





**Hi friends, எப்படி இருக்கீங்க? உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதத் தொடரில் உங்களை மீண்டும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இதுவரை நாம் தீமோத்தேயுவின் பின்னணியையும், அவருடைய ஊழியங்களைப் பற்றியும், அவர் சந்தித்த சவால்களைப் பற்றியும், அவர் கிறிஸ்துவிற்காகப் பாராட்டின வைராக்கியம் பற்றியும், அவர் எழுதின நிருபங்களைப் பற்றியும் பார்த்தோம்.**



ஒரு சாதாரண வாலிபன் இந்த உலகை அசைக்கும் ஊழியக்காரனாய் மாறுவதற்கு ஊன்றுகோலாக ஒருவர் இருந்திருக்க வேண்டும் அல்லவா? அப்படி தீமோத்தேயுவிற்கு ஊன்றுகோலாக இருந்தவர் தான் பவுல். தனக்கடுத்து மந்தையை வழிநடத்த ஒரு நல்ல தலைவனை எழுப்புவதே நல்ல ஊழியனுக்கு அடையாளம். எப்படி மோசே யோசுவாவை தனக்கு அடுத்து என்று உருவாக்கினாரோ, அதேபோல் பவுலும் தீமோத்தேயுவை உருவாக்கினார் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தத் தொடரில் பவுலுக்கும் தீமோத்தேயுவிற்கும் இடையே இருந்த ஒரு அழகான ஆவிக்குரிய உறவைப் பற்றிப் பார்ப்போம். வாங்க தொடருக்குள் போவோம்.

## தகப்பனுக்கும் பிள்ளைக்குமான உறவு

**"தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ்செய்வதுபோல, அவன் என்னுடனேகூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியஞ்செய்தானென்று அவனுடைய உத்தமகுணத்தை அறிந்திருக்கிறீர்கள்" பிலி. 2:22.**

பவுலின் மரணம்வரை தீமோத்தேயு அவருக்கு ஒரு மகனைப் போல இருந்தார். அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள உறவு ஒரு தகப்பனுக்கும் மகனுக்கும் உள்ள உறவைப் போல் இருந்தது. **"உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப் போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை"** என்று பவுல் தீமோத்தேயுவை குறித்து பிலிப்பியர் 2:20ல் கூறுகிறார்.


இதிலிருந்து ஒரு பிள்ளையினிடத்தில் தகப்பனுடைய குணம் இருப்பதைப் பார்க்கலாம். அதேபோலத் தனது ஆவிக்குரியத் தகப்பனாகிய பவுலைப் போலக் கர்த்தருக்கு பயந்து தனக்கு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊழியங்களிலும் உண்மையாக இருக்க வேண்டுமென்ற உண்மை தன்மையும், மக்களை விசாரிக்கிற கரிசனையும் தீமோத்தேயுவிடம் இருப்பதைக் காணலாம்.

நாம் எல்லோரும் ஏற்கெனவே அறிந்திருந்ததைப் போலப் பவுலுக்கும், தீமோத்தேயுவிற்கும் மிகப்பெரிய சந்ததி இடைவெளி இருந்தது. எப்போதும் இளைஞர்கள், இளைஞர்களோடு நட்பு கொள்ளவே விரும்புவர். ஆனால் இங்கு முதியவரான பவுலுக்கும், இளைஞனாகிய தீமோத்தேயுவுக்கும் உள்ள நட்புறவு ஆழமாக இருந்தது.

எப்பொழுதும் முதியவர்கள் ஒரு அறிவுரை கூறினாலோ, ஆலோசனை சொன்னாலோ அது இளைஞர்களுக்குப் பிடிக்காது. அதனை ஏற்றுக் கொள்வதற்கு மாறாக விவாதம் செய்வர். அவர்களை எதிர்த்துப் பேசுவர். 'உங்களுக்கெல்லாம் என்ன தெரியும்' என்று அசால்டாகக் கூறிவிட்டு அவர்களை அவமதித்துச் சென்று விடுவர்.

ஆனால் நாம் வேதத்தில் அநேக இடங்களில் பவுல் தீமோத்தேயுவிற்கு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும், எச்சரிப்புகளையும் கொடுத்திருப் பதைக் காண்கிறோம். அவைகள் எல்லாவற்றையும் கைக்கொள்ளவும், பின்பற்றவும் தீமோத்தேயு ஜாக்கிரதையாய் இருந்ததையும் அதற்குக் கீழ்ப்படிந்ததையும் மறுபேச்சு இல்லாமல் அவைகளை ஏற்றுக் கொள்வதையும் நாம் பார்க்க முடியும்.

ஒரு தகப்பன் சொல்லைத் தட்டாத பிள்ளையைப் போல ஊழியத்திலும், எல்லா காரியத்திலும் பவுலுக்கு ஒரு பிள்ளையைப் போல் இருந்தார் நமது தொடரின் கதாநாயகன்.



## குருவுக்கும் சீஷனுக்குமான உறவு

மட்டுமல்லாது பவுல் என்னைப் போல மனதுடையவன் என்று குறிப்பிடுவதால் தீமோத்தேயு, பவுலைப் போலச் சிந்திக்க கூடியவர் என்பதை நாம் அறிகிறோம். பவுல் வயதில் மூத்தவர். தீமோத்தேயுவோ இளைஞன். ஒரு முதியவரைப் போல இளைஞனால் சிந்திக்க இயலாது. ஏனெனில் முதியவர்கள் பல அனுபவங்களை வாழ்வில் கொண்டிருப்பர். இதிலிருந்து தீமோத்தேயு தன் குருவாகிய பவுலைப் போலச் சிந்திப்பதில் முதிர்ச்சியுடையவர் என்று அறிகிறோம்.

இங்குத் தீமோத்தேயு வெறும் வாயினால் தான் பவுலிடத்திலிருந்து கற்றுக் கொண்டதை உபதேசமாகக் கூறுகிறவராய் மட்டுமல்லாமல், அவர் எவ்வாறு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றினாரோ அதேபோலத் தானும் பின்பற்றுகிற சீஷனாய் இருந்தார்.

## எஜமானனுக்கும் ஊழியனுக்கும் உள்ள உறவு

தீமோத்தேயு பவுலுக்கு ஒரு நல்ல உதவியாளராகவும் இருந்தார். பசியிலும், பட்டினியிலும், வறுமையிலும், காவலிலும் எல்லா இன்ப, துன்ப நேரங்களிலும், பிற ஊழியர்கள் தன்னை விட்டுப் போனபோதிலும் பவுலுடன் கடைசி வரைக்கும் தன் எஜமானனை விட்டுச் செல்லாத நல்ல ஊழியனாய் இருந்தார் தீமோத்தேயு.

## நலம் விரும்பும் நண்பன்

தண்ணீர் மட்டும் குடிப்பதை நிறுத்திவிட்டு, உன் வயிற்றின் நலனுக்காகவும், உனக்கு அடிக்கடி ஏற்படும் உடல்நலக் குறைவின்பொருட்டும் சிறிதளவு திராட்சை ரசமும் பயன்படுத்து என்று வேதத்தில் தீமோத்தேயுவிற்கு ஆலோசனை கூறுகிறார்.

இதிலிருந்து தீமோத்தேயுவிற்கு அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிகிறோம். பெலவீனங்கள் மத்தியிலும் சாக்குபோக்கு சொல்லாமல் தீமோத்தேயு கிறிஸ்துவிற்காக அயராமல் உழைத்தார். நம்ம எல்லாருக்குமே ஒரு well wisher இருப்பாங்க; அப்படித்தானே? பவுலும் தீமோத்தேயுவின் உடல் நலத்தின் மீது அக்கறை யுள்ள well wisherஆக இருந்தார்.

**பார்த்தீங்களா friends, பவுலுக்கும் தீமோத்தேயுவிற்கும் எவ்வளவு அழகான உறவு இருந்தது என்பதை! நமக்கும் நம்மைக் கிறிஸ்து இயேசுவுக்குள் வழிநடத்தும் தலைவர்களுக்கும் உள்ள உறவு எப்படி இருக்கிறது என்பதை யோசித்து பார்ப்போம். நாம் அவ்வப்போது அவர்களுடன் தொடர்பில் இருக்கின்றோமா? தீமோத்தேயுவை போல நாம் அவர்களைக் கனப்படுத்தி, அவர்களது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிகிறோமா? அல்லது நாம் அவர்களை அல்லல் தட்டுகிறோமா? ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கும் ஆவிக்குரிய தகப்பன், தாய்மார்கள் கிடைத்தற்கரிய பொக்கிஷங்கள்.**

**தீமோத்தேயு என்னும் விதை முளைத்து மரமாய் வளர்ந்து, அநேகருக்கு நல்ல கனிகளைக் கொடுக்கப் பவுல் என்னும் தோட்டக்காரன் தேவை. அதேபோல் நாமும் மரமாய் வளர்ந்து நல்ல கனிகள் கொடுக்க ஆவிக்குரிய தாய் தகப்பன்மார்கள் தேவை. அவர்களுடைய கண்டிப்புகளும், ஆலோசனைகளும் கிறிஸ்துவுக்கு நேராய் நம்மை நடத்தும். அவர்கள் அல்லாது நம்மால் தனியாய் கிறிஸ்துவுக்குள் வளரவும் முடியாது, செயல்படவும் முடியாது எனவே சிந்தித்து செயல்படுவோம்.**

- வீர சகாப்தம் தொடரும்...

# ஜெபக் குறிப்பேடு

## நவம்பர் - 2024

ஜெபம்: எஸ்தர்

- இஸ்ரேல் ஹிஸ்புல்லா இடையே போரினால் ஏற்பட்டுள்ள பதட்டமான சூழல்கள் நிறுத்தப்பட ஜெபிப்போம்.
- ஹமாஸ் தீவிரவாதிகளால் சுமார் 1200 இஸ்ரவேலர்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். இனியும் இப்படிப்பட்டதான மரணங்கள் சம்பவிக்காமல் போர்கள் முடிவுக்கு வர ஜெபிப்போம்.
- லெபனானில் – ஹிஸ்புல்லா அமைப்பினர் பயன்படுத்திய பேஜர்கள் வெடித்து சிதறியதில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். காயமடைந்துள்ள 4000 பேர் சுகம்பெற ஜெபிப்போம்.
- உக்ரைன் ரஷ்யா போர் நிறுத்தப்படவும், இரு தேசங்களுக்கும் சமாதானம் உண்டாகவும் ஜெபிப்போம்.
- விமான நிலையங்களில் பயணிகளுக்குத் தகுந்த வசதிகள் செய்யப்படவும், விமான நிலையங்கள் சீரமைக்கப்படவும் ஜெபிப்போம்.
- விமானங்களில் ஏற்படும் பழுதுகளினால் ஏற்படும் விபத்துக்கள் தடுக்கப்படவும், விமானங்கள் சரியான முறையில் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.
- விமான ஓட்டிகளுக்கு தேவன் நல்ல ஞானம் கொடுக்கவும், தெளிவான பார்வை உண்டாகவும் ஜெபிப்போம்.
- இணையவழி விளையாட்டுக்களின் தீமையைக் கருத்தில் கொண்டு அதைத் தடுக்க அரசுச் சட்டம் கொண்டு வர ஜெபிப்போம்.
- இணையவழி விளையாட்டு மோகத்தினால் மனநிலை சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உள்ளாகியிருக்கும் இளம் தலைமுறையினர் சுகம் பெற ஜெபிப்போம்.
- இதன் காரணமாகப் படிப்பையும், சிந்திக்கும் ஆற்றலையும் இழந்து நிற்கும் இளம் வாலிபர்கள் அதிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.
- இந்தியா தேசத்தில் உள்ள அனைத்து பெண்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
- பெண்களுக்கு எதிராக நடைபெறும் பாலியல் துன்புறுத்தல்கள் தடுக்கப்படவும், பெண்களுக்குத் தகுந்த பாதுகாப்பு கிடைக்கவும் ஜெபிப்போம்.
- பெண்கள் மற்றும் வாலிப பெண் பிள்ளைகளைக் கடத்தி, அதன் மூலம் வருவாய் ஈட்டும் மாஃபியா கும்பல்கள் கண்டுப்பிடிக்கப்படவும், அவர்களுக்கு ஏற்றத் தண்டனை கிடைக்கப்பெறவும் ஜெபிப்போம்.
- இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகள் வளர்ச்சி பெறவும், இந்திய தேசம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையவும் ஜெபிப்போம்.
- சபைகளுக்குள் காணப்படும் பிரிவினையின் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.
- சபை, எழுப்புதலுக்காக ஆயத்தமாக்கப்படவும், வாலிபர்கள் கர்த்தருக்காகச் சேனையாக எழும்பவும் ஜெபிப்போம்.
- சபைகளுக்குள் ஒருமனம் உண்டாகவும், சபை விசுவாசிகளுக்கும், போதகர்களுக்கும் ஐக்கியம் உண்டாகவும் ஜெபிப்போம்.




- சபைகளில் பரிசுத்தம் உண்டாகவும், பரிசுத்த சேனையை கர்த்தர் எழுப்பவும் ஜெபிப்போம்.
- தேசம் முழுவதும் பல மாநிலங்களில் மழையினால் பாதிக்கப்பட்ட ஜனங்கள் பாதுகாக்கப்படவும், எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.
- இந்திய இராணுவத்தில் பணியாற்றி வரும் 1.2 மில்லியன் வீரர்கள் பாதுகாக்கப்படவும், அவர்களுக்கு நல்ல ஞானம் உண்டாகவும் ஜெபிப்போம்.
- போரினால் நேரிடும் இராணுவ வீரர்களின் உயிரிழப்புகள் தடுக்கப்பட ஜெபிப்போம்.
- இராணுவ வீரர்களுக்குள் காணப்படும் குழப்பமான மனநிலை மாறவும், தேவ ஆளுகை அவர்களைச் சூழ்ந்து கொள்ளவும் ஜெபிப்போம்.
- பயங்கரவாதிகளின் தாக்குதல்களினால் எல்லைகளில் உள்ள பதட்டமான சூழ்நிலை மாற ஜெபிப்போம்.
- உறவுகளைப் பிரிந்து நாட்டுக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து நிற்கும் இராணுவ வீரர்களின் குடும்பங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.
- வறட்சியான கால சூழ்நிலையால் பயிர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நல்ல மழை பெய்து பயிர் நிலங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.
- நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்து வருவதால், போதிய தண்ணீர் இல்லாமல் பயிர்கள் பாதிக்கப்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.
- அதிக மழையினால் உணவுப் பொருட்கள் சேதமடைந்ததால், அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி அதிகரித்துள்ளது. இதனால் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படாமல் இருக்க ஜெபிப்போம்.
- ஆந்திராவில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 4.15 லட்சம் மக்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட ஜெபிப்போம்.
- மழையினால் தங்கள் உறைவிடங்களை, சொந்தங்களை இழந்து தவிக்கும் மக்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட ஜெபிப்போம்.
- மழையினால் ஏற்படுகிற மரணங்கள் தடுக்கப்படவும், ஆசீர்வாதமான மழை பெய்யவும் ஜெபிப்போம்.




வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில்
அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான
இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி
ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS
கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில்
பங்குபெற்று பெலன் அடையலாமே!
உன்னை பெலப்படுத்திக் கொண்டு,
பிறரையும் பெலப்படுத்த
ஆயத்தப்படு!
ஆயத்தப்படுத்து!

## EVERY 1ST SUNDAY (3RD NOV.)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre,
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant, Near
Kamarajar School, 90 Feet
Road,9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal, # 3,
6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
Jehovah Jireh Towers, 51/8D/3,
1st Floor, Tiruchendur Road,
Muniasamypuram
LAND MARK: SOUTH POLICE STATION TO KAMARAJ COLLEGE RD.
9442885315 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2ND SATURDAY (9TH NOV.)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line, Pulikeshi Nagar, Frazer
Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza, [Theekadir
Busstop] 41, K.Salai pudur Byepass
Road, Madurai
9750955548

## EVERY 2ND SUNDAY (10TH NOV.)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor, 163,
raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**THANE (5PM - 7:30PM)**
R.P. Mangala High School
(Near Railway Station),
Room No.10,
Opp. Bank of Maharashtra,
Thane (East)
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric
Higher Secondary School,
Mela Sathankulam.
9442885315 | 9786212103

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**CHENGALPET (3PM – 5:30PM**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex,
Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216,
1st Floor, Near Fire Service,
Gandhiji Road
9750722000

## EVERY 3RD SUNDAY (17TH NOV.)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor ,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
# 5, Gandhi Irwin Road,
Egmore,
(Opp. Railway Station)
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex, TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road, Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet, opp. Latha
Steel, E C R Road.
8344433800 | 9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4TH SATURDAY (23RD NOV.)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71, Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY (24TH NOV.)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**DHARAPURAM (3:30PM – 6PM)**
2nd Floor, MK Arcade,
Near Bus Stand,
8248283373 | 9442885315

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 24th NOVEMBER
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH

அலசல்: கெத்சி கிளாரிவின்

## உணர்வுகள்

# வெறுப்பு



Hatred

கடந்த 8 மாதங்களாகப் பயம், தனிமை, கோபம், மனஅழுத்தம் போன்ற எதிர்மறையான உணர்ச்சிகளைப் பற்றியும், அவைகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை பற்றியும், ஒவ்வொரு மாதமும் உணர்வுகள் என்ற பகுதியின் மூலமாகத் தொடர்ந்து வாசித்துத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இம்மாதமும் இத்தொடரின் முடிவு பகுதியாக வெறுப்பு என்ற தலைப்பில் பார்க்கவிருக்கிறோம்.

வெறுப்பு (Hatred) என்பது மிகவும் ஆழமான விருப்பமின்மை காரணமாகத் மனரீதியாகத் தோன்றும் ஓர் உணர்ச்சி ஆகும். இது பொதுவாக நபர்கள், பொருட்கள் அல்லது எண்ணங்களின் மீது ஏற்படும். பொதுவாக வெறுப்புடன் இருப்பவரிடம் கோபமும், மன அமைதியின்மையும், முகத்தில் நிதானமின்மையும் காணப்படும். நம்முடைய அன்றாட வாழ்வில் வெறுப்பு தவிர்க்க முடியாத ஓர் உணர்வாகிறது.

ஒரு நபர்மீது வெறுப்பு, ஒரு செயல்மீது வெறுப்பு அல்லது ஒரு பொருளின் மீது வெறுப்பு என இப்படி பல வெறுப்புகள் நிறைந்த தருணங்களை நீங்களும் சந்தித்திருப்பீர்கள்!

### உதாரணத்திற்கு,



Traffic Signal-ல் காத்திருப்பதில் ஏற்படும் வெறுப்பு



Sunday விடுமுறைக்கு பிறகு Monday பணிக்குத் திரும்புவதில் ஏற்படும் வெறுப்பு.



அம்மா சமையலுக்கு பாகற்காய் செய்தால் அந்த உணவின் மீது வரும் வெறுப்பு.



Maths பாடத்தைப் படிக்க முடியாமல் அதின்மேல் வரும் வெறுப்பு.




இப்படி பல வெறுப்புகளை நாம் அனுதினமும் கடந்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட வெறுப்பு ஒரு தனி நபரின் மீது ஏற்பட்டால், மேலும் அது சரியான முறையில் கையாளப்படவில்லை என்றால் அதுவே பொறாமையாக மாறி ஒருவரின் வாழ்க்கையையே அழித்து விடும் இயல்புடையது. இதனைச் சரியாகக் கையாள்வதை பற்றி இப்பகுதியில் காண்போம் வாருங்கள்!

## வேதாகமத்தில் வெறுப்பினால் ஏற்பட்ட விளைவுகள்

இஸ்ரவேலின் முதல் ராஜாவாகத் தெரிந்தெடுக்கப்பட்ட சவுல் என்பவரைக் குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். சவுல் தாவீதை படைகளுக்குத் தலைவராக நியமித்தார். ஆனால் கோலியாத் என்னும் அரக்கனை தாவீது வென்றதால், பெண்கள் அவனைக் கொண்டாடியதின் நிமித்தம், தாவீதின் மீது பொறாமையும் கோபமும் அடைந்து அவனைச் சவுல் கொலை செய்ய முயன்றான். இதுவே இந்த வெறுப்பின் விளைவு. சாதாரணமான ஒரு வெறுப்பின் விளைவே, அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவரையே கொலைக்காரனாய் மாற்ற ஊக்குவிக்கும் தன்மை கொண்டது. எனவே இந்த உணர்ச்சியைச் சரியான முறையில் கையாள்வது மிகவும் அவசியமாகும்.



## வெறுப்பை மேற்கொள்வது எப்படி?




- முதலாவது மன்னிக்கும் இருதயம் வேண்டும். உங்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தக்கூடிய அந்த நபர் யாராய் இருப்பினும் அவரை மனதார மன்னிக்க முற்படுங்கள்.

- நீங்கள் வெறுத்த அந்த நபரைப் புரிந்துக்கொள்ள உண்மையாய் முயற்சி செய்யுங்கள்.

## வெறுப்பை மேற்கொள்ளச் சில வேத வசனங்கள்

- ''உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்து கொள்ள வேண்டும். பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமைகொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக.'' (லேவியராகமம் 19:17-18)

- ''எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்.'' (லூக்கா 6:27)

**அன்பு வாலிபர்களே!**
**இப்படிப்பட்ட எதிர்மறையான சில உணர்ச்சிகளை அவ்வப்போதே நாம் கையாளாவிட்டால், அதின் விளைவுகள் நம் வாழ்வில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே இப்படிப்பட்ட உணர்ச்சிகளைக் கையாள அனுதினமும் தேவனோடு உறவு மற்றும் ஜெப நண்பர்களுடனான ஐக்கியம் போன்றவற்றில் உங்களை நீங்களே ஈடுப்படுத்திக் கொள்ள தீர்மானிக்கும்போது, வெறுப்பை மாற்றி நீங்களும் கனிதரும் வாழ்வை வாழத் தேவன் பெலன் கொடுப்பார்!**

தகவல்: வயலா

# NISUIN BERIYTH





## (திருமண உடன்படிக்கை)

பகுதி - 10

Hello வாலிபர்களே! இந்த வருடம் துவக்கி ஒவ்வொரு மாதமும் திருமணத்திற்கென ஆயத்தப்படும் கிறிஸ்தவ வாலிபர்கள் செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து பல காரியங்களைத் தியானித்தோம். அந்த ஆலோசனைகளெல்லாம் உங்களுக்கு நிச்சயம் பிரயோஜனமாக இருந்திருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். இப்பொழுதும் இந்தக் கட்டுரையின் இறுதி பகுதிக்குள் வந்து விட்டோம்.

சரி, ஒரு குறிப்பிட்ட மணமகனுக்கும், மணமகளுக்கும் நிச்சயமாகி விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த மணமகனும், மணமகளும் பேச ஆரம்பிப்பார்கள், பாருங்கள்! ஒரு மணி நேரம்... இரண்டு மணி நேரம்... இல்லை... இல்லை, பல மணி நேரங்கள் ஆனாலும் போதும் என்று மனம் வருவதே இல்லை. பல வருடங்கள் பேச வேண்டியதை சில நாட்களுக்குள் பேசி விடுவார்கள். பேசுவது தவறு என்று கூறவில்லை, ஞானமாய் பேச வேண்டியதை மட்டும் குறுகிய நேரத்திற்குள் பேசி நிறுத்தி விட வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பார்கள். அதுபோலச் சிலர் தேவையில்லாத பழைய பாவ வாழ்க்கைப் போன்ற காரியங்களை எல்லாம் பேசுவதினால் பல நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் தடைபட்டு போனது உண்டு. அதுபோல இல்லாமல், கர்த்தருடைய பிள்ளைகள் ஞானமாய் நடந்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## ஆடம்பரங்கள் தேவைதானா?



சில வாலிப பிள்ளைகள், சில நண்பர்களின் ஆலோசனையின்படி, சில செல்வந்தர்கள் வீட்டுத் திருமணத்தில் நடந்தது போல வீண் ஆடம்பர செலவுகளைச் செய்யக் கற்றுக் கொண்டு அதையே பெற்றோரிடம் பிடிவாதமாய் செய்யக் கூறுவார்கள். உதாரணமாகப் பத்திரிக்கை அச்சிடுதல் எளிதாகவும் செய்ய முடியும். மிக உயர்ந்த ரக காகிதத்தில் அதிக செலவிலும் செய்ய முடியும். விலை உயர்ந்த பத்திரிக்கை என்பதால் யாரும் அதை நிரந்தரமாக வைத்துக் கொள்ளப் போவதில்லை. எனவே திருமணம் குறித்த தகவல்களை மட்டும் அளிக்க, அதற்கு ஏற்றாற் போலச் செலவிட்டு பத்திரிக்கை அச்சிடுதல் நல்லது.

ஒவ்வொரு செலவுகளையும் செய்யும் முன் இது கண்டிப்பாகத் தேவையா? இது இல்லாவிட்டால் என்னவாகும்? இது தேவனுக்கு பிரியமானதா? போன்ற வினாக்களுக்கு விடை கண்டறிந்து பின் செயல்பட வேண்டும்.

இலட்சங்களையும் கோடிகளையும் விழுங்கிய அநேக திருமணங்கள் ஆசீர்வாதமின்றி போனதும் உண்டு. எளிமையாய் நடைபெற்ற அநேக திருமணங்கள் சந்ததி சந்ததிக்கும் ஆசீர்வாதமாய் இருப்பதும் உண்டு. நீங்கள் இறைமகன் இயேசுவின் பிள்ளைகள் என்பதை நினைவில் கொண்டு செயல்படுவீர்களாக.


## முதல் அழைப்பு



உங்கள் திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது, இத்தனை நாள் வாழ்க்கைத் துணைக்காக மட்டும் ஜெபித்த நீங்கள், இப்பொழுது உங்கள் திருமணத்திற்காக முதலாவது இயேசுவை 'அழைத்து' ஜெபியுங்கள். கானா ஊர் திருமணத்திற்கு இயேசுவும் அவரது சீஷர்களும் அழைக்கப்பட்டிருந்தனர் (யோவான் 2:2). சீரும் சிறப்புமாக நடைபெற்ற திருமணத்திலோ திராட்சைரசம் குறைவுப்பட்டு விட்டது. திராட்சை ரசமோ உடனடியாகத் தயார் செய்து கொடுக்க முடியாத பானம். குறைந்தது மூன்று நாட்களாவது புளித்தால் (fermentation) தான் அதற்குரிய சுவை கிடைக்கும். இயேசு அந்தத் திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தபடியால், பங்கு பெற்றதால் பிரச்சனை என்னவென்று பலர் அறியும் முன்பே, சரி செய்யப்பட்டு விட்டது.

## தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்

திருமணம் ஒழுங்கு செய்யப்பட்ட நாளிலிருந்து திருமண நாள்வரை, பத்திரிக்கை அச்சிடுதல், யார் யாரை அழைக்க வேண்டும் என்று தீர்மானித்தல், அனைவருக்கும் அழைப்பிதழ் கொடுத்தல், திருமண ஆடைகள் மற்ற பொருட்கள் வாங்குதல், உணவு ஆயத்தங்கள் போன்ற எல்லா காரியங்களையும் குடும்பத்தோடு ஜெபித்தே செயல்படுத்துங்கள்.



**இருப்பினும் திருமணநாள் நெருங்க நெருங்க ஒரு சிலருக்கு சில காரியங்களைக் குறித்து ஒருவித கலக்கம் இருந்துக் கொண்டே இருக்கும். 'பணத் தேவைகளை என் பெற்றோர் எப்படி சமாளிப்பார்கள், இல்லாவிட்டால் சில முக்கிய உறவினர்களைத் திருமணத்திற்கு அழைத்தாலும் பிரச்சனை அழைக்காவிட்டாலும் பிரச்சனை அவர்களால் ஏதேனும் சண்டையோ, சமாதான குறைச்சலோ ஏற்பட்டு விடக் கூடாதே', இன்னும் சிலருக்கு திருமணத்தில் ஆயத்தம் செய்த உணவு அனைவருக்கும் போதுமானதாக இருக்க வேண்டுமே என்ற கவலை, இன்னும் இயற்கை சூழ்நிலை, குடும்பத்தில் வயதானவர்கள் இருப்பின் அவர்கள் சுகம் போன்ற உங்கள் கவலைகள் எதுவாக இருந்தாலும் அதைத் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். எந்த மனிதர்களிடமும் கூறி அழுது கொண்டிருக்காமல், எல்லாவற்றையும் ஒரு நோட்டில் அல்லது ஜெபக்குறிப்பேட்டில் எழுதி அனுதினமும் கருத்தாய் ஜெபியுங்கள். கூடுமானால் ஒரு நாளாவது பரிசுத்த உபவாச நாளை நியமித்து ஜெபித்து பாருங்கள். அப்புறம் என்ன? நீங்கள் தேடிப் பார்த்தாலும் உங்கள் திருமணத்தில் ஒரு குறையையும் ஒருவராலும் கண்டறிய முடியாது. கண்டிப்பாக "கர்த்தர் உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பார்!"**

*('நிசுயின் பெரித்' முடிவுரை அடுத்த இதழில் தொடரும்).*

# செய்திகள்!

## ஆசியாவில் ஊழியர்களைப் பணி நீக்கம் செய்யும் சாம்சங்: 10-ல் ஒருவர் வேலையிழக்க வாய்ப்பு!

ஆசிய பிராந்தியத்தில் தங்கள் நிறுவன ஊழியர்களைப் பணி நீக்கம் செய்ய சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. இதனால் 10-ல் ஒரு ஊழியர் வேலை இழக்கக்கூடிய சூழல் உருவாகும் என்ற தகவலும் வெளியாகி உள்ளது.

தென்கொரிய நிறுவனமான சாம்சங் உலகம் முழுவதும் பல்வேறு எலக்ட்ரானிக் சாதனங்களை உற்பத்தி மற்றும் விற்பனை செய்து வருகிறது. குறிப்பாக ஸ்மார்ட்போன், டி.வி, குளிர்சாதன பெட்டி, ஏ.சி போன்ற எலக்ட்ரானிக் சாதனங்களை உற்பத்தி செய்து வருகிறது. உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் இதன் உற்பத்தி கூடங்கள் உள்ளன. இந்தியாவில் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் இந்நிறுவனத்துக்கு உற்பத்தி கூடம் உள்ளது. இந்த நிலையில் தான் ஆசியாவில் சாம்சங் நிறுவன சந்தை வாய்ப்பு பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஊழியர்களைப் பணி நீக்கம் செய்ய சாம்சங் திட்டமிட்டுள்ளது.

தென்கிழக்கு ஆசியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் ஜாப் கட் நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளதாக சாம்சங் நிறுவன செய்தித் தொடர்பாளர் சர்வதேச ஊடக நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார். இது தங்கள் நிறுவன செயல்திறனை மேம்படுத்தும் நோக்கில் எடுக்கப்பட்டுள்ள முடிவு. மேலும், ஊழியர்கள் படிநிலையைச் சீர் செய்வது வழக்கமான ஒன்றுதான் என்றும், இத்தனை ஊழியர்களைப் பணி நீக்கம் செய்ய வேண்டுமென்ற டார்கெட் எல்லாம் இல்லை என்றும் சாம்சங் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாம்சங் நிறுவனத்தில் மொத்தமாக 2.67 லட்சம் ஊழியர்கள் பணியில் உள்ளனர். இதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். சாம்சங் சந்தை பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பணியில் உள்ள ஊழியர்களில் சுமார் 10 சதவீதம் பேர் பணி நீக்க நடவடிக்கைக்கு ஆளாகலாமென ப்ளூம்பெர்க் தெரிவித்துள்ளது.மெரிக்க சிப் உற்பத்தி நிறுவனமான இன்டெல், கடந்த ஆகஸ்ட் மாதம் தங்கள் ஊழியர்களில் 15 சதவீதம் பேரைப் பணி நீக்கம் செய்ய உள்ளதாக அறிவித்தது. இதைத் தொடர்ந்தே சாம்சங்கும் இந்த முடிவை எடுத்துள்ளது கவனிக்கத்தக்கது.

- 04 அக்டோபர் 2024, இந்து தமிழ் திசை.

## இந்திய பங்குச்சந்தையில் கடும் சரிவு முதலீட்டாளர்களுக்கு ஒரே நாளில் ரூ.9.78 லட்சம் கோடி இழப்பு!



இந்திய பங்குச்சந்தைகளில் நேற்று கடும் சரிவு ஏற்பட்டது. ஒரே நாளில் ரூ.9.78 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டதால் முதலீட்டாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். மத்திய கிழக்கு நாடுகளில் தீவிரம் அடைந்த போர் பதற்றம் உள்ளிட்ட காரணங்களால் இந்திய பங்குச்சந்தைகள் கடும் பாதிப்பைச் சந்தித்தன. முந்தை நாள் வர்த்தகத்தில் மும்பை பங்குச்சந்தைக் குறியீடான சென்செக்ஸ் 84,266 புள்ளிகளில் நிறைவடைந்திருந்தது. இந்நிலையில், நேற்று வர்த்தகம் துவங்கியபோதே 83,002 புள்ளிகளில் சரிவுடன் துவங்கியது. அதிகபட்சமாக 82,434 புள்ளிகள்வரை வீழ்ச்சி அடைந்தது. நாள் முழுவதும் சரிவுடனேயே நீடித்தது.

வர்த்தக முடிவில் முந்தைய நாளைவிட 2.1 சதவீதம், அதாவது 1,769 புள்ளிகள் சரிந்து 82,497 புள்ளிகளானது. இதுபோல், தேசிய பங்குச்சந்தை குறியீடான நிப்டி 547 புள்ளிகள் சரிந்து 25,250 புள்ளிகளில் நிறைவடைந்தது. இந்தக் கடும் சரிவால், மும்பை பங்குச்சந்தையில் ரூ.4,74,86,464 கோடியாக இருந்த பங்குகளின் மதிப்பு, ரூ.9,78,778 கோடி சரிந்து ரூ.4,65,07,685 கோடியானது. இதுபோல், கடந்த செப்டம்பர் 30ம் தேதியிலும் பங்குகளின் மதிப்பு ரூ.3,57,885 கோடி வீழ்ச்சி அடைந்தது. அதாவது 3 நாட்களிலேயே பங்குகளின் மதிப்பு ரூ.13,36,664 கோடி சரிந்ததுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர் பதற்றம் ஒரு புறம் இருக்க, சீனாவில் முதலீட்டாளர்களுக்குக் கவர்ச்சிகரமான சலுகைகளை அறிவித்ததால், இந்தியாவுக்கு வர வேண்டிய வெளிநாட்டு பங்கு முதலீடுகள் சீனாவுக்கு திரும்பியுள்ளதாக நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

- 04 அக்டோபர் 2024, தினகரன்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள படங்களில்
வேதாகம தேசங்கள் மறைந்திருக்கிறது.
அதைக் கண்டுபிடித்து வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

## வேதாகம இடங்கள்


பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.11.2024

1



2






3



4



### கடந்த மாத வெற்றியாளர்

சகோதரி சுகந்தி (அரக்கோணம்)
அவர்களை வாழ்த்துகிறோம்.

5



6



### கடந்த மாத விடைகள்

1. ஆறு (யோவான் 2:6)
2. 38 (யோவான் 5:5)
3. 200 (மாற்கு 6:37)
4. 2 (யோவான் 4:47-54)
5. நாலாம் ஜாமம் (மத்தேயு 14:25)
6. 3 (யோவான் 2:1)
7. 3 (மத்தேயு 15:32)
8. முதலாவது (மத்தேயு 17:27)
9. 7 (யோவான் 4:52)
10. 18 (லூக்கா 13:11)

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 10 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

**நாலுமாவடியில்...**

இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்

JESUS REDEEMS MINISTRIES



# Achievers

2025

**ஜனவரி 26** ஞாயிற்றுக்கிழமை

தேர்வு எழுதும் மாணவ-மாணவியர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை)

**இடம்:**
தேவனுடைய கூடாரம்,
நாலுமாவடி

**நேரம்:**
மதியம் 1:00 மணி முதல்,
மாலை 5:00 மணி வரை

ஆலோசனையும், ஜெபமும்:

## சகோ. மோகன் சி. லாசரஸ்



பள்ளிக் கல்லூரியில் படிக்கும் மாணவ-மாணவியர் இக்கூடுகையில் தவறாமல் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

**தோல்வி பயமா? தேர்வைக் குறித்த கலக்கமா?**
**படித்தது மறந்து போகிறதா? சந்தேகமா?**
**இயேசு உங்களுக்கு உதவி செய்வார்!**

தொடர்புக்கு: 97509 55547 | 94428 85315